ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2044 - 2017 නොවැම්බර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.02

*2044 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1926 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1935 |


**கவனிக்க.-** (i) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1923 - B81222 - 5,453 (2017/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## சிறைச்சாலைத் திணைக்களம்

நிறைவேற்றுச் சேவை வகுதியில் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016 (2017)

சிறைச்சாலைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் தரம் III சட்ட அலுவலர் பதவியில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்தற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைத் தழுவி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைத் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 09" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவை வகுதியின் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2016 (2017)" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கோரலுக்கான இறுதித் தினம், 2017.12.04

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமொன்று அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமடைந்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கவனத்திலெடுக்கப்படமாட்டா. இறுதித் தினம் வரையிருந்து விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கத் தாமதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு விண்ணப்பகாரர்களே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவைக்கான ஆட்சேர்ப்பு முறை**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படக்கூடிய கொள்கைத் தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்பட்டவர்களாவீர்கள்.

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்றாண்டு (03) நன்னடத்தைக் காலமொன்றுக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன், குறிப்பிட்ட மூன்றாண்டு (03) காலத்துள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதலும் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 இற்கமைய பதவியில் இணைந்து 05 ஆண்டு காலத்துள் சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக, மற்றைய அரசகரும மொழியில் குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அரசகரும மொழியல்லாத ஒரு மொழிமூலத்தில் சேவையில் இணைந்துகொண்ட அலுவலர்கள் நன்னடத்தைக் காலத்துள் உரிய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூ. 1,10,895 (SL -1- 2016) மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதிய, 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் உரித்தாகும்).

4. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல், அத்துடன்

(ii) உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் மூன்றாண்டுகளுக்கு (03) குறையாத முனைப்புமிகு தொழில் அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை :** ஆகக்குறைந்தது 21 வயதுக்கும் ஆகக்கூடியது 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

6. **உடல் தகைமைகள் :**

(i) அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பகாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பகாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கோரும் இறுதித் தினத்தன்று, பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்வதற்கு அவசியமான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்று விண்ணப்பங்கோருவதற்கான அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் இறுதித் தினமான 2017.12.04 அன்று எல்லா வகையிலும் அத்தகைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை.-** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவின் நியமன அதிகாரி அரசாங்க சேவை ஆணைக்குழுவாகும். அத்துடன், கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கீழ்க்காணும் விடயங்களுக்கு புள்ளிகள் உரித்தாகும்.

| | விடயம் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சட்டம் பற்றிய பட்டம் | | |
| | ➢ முதலாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 20 | |
| | ➢ இரண்டாம் வகுப்பு உயர் சித்தியொன்றுக்கு | 15 | |
| | ➢ மூன்றாம் வகுப்பு கீழ்மட்ட சித்தியொன்றுக்கு | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் முதலாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பு சித்தியொன்றுக்கு | 10 | |
| | **குறிப்பு**.- கௌரவ சித்தியொன்றுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மட்டும்). | | |
| 02 | **மேலதிக தொழில்சார் தகைமைகள் :** | | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்படும் குறித்த துறை பற்றிய ஓராண்டு காலத்திற்குக் குறையாதவொரு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறிக்கு அல்லது பட்டப்பின்படிப்பு சட்ட டிப்ளோமா கற்கைநெறிக்கு (டிப்ளோமா ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்படும் குறித்த துறை பற்றிய ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாதவொரு டிப்ளோமா கற்கைநெறிக்கு (டிப்ளோமா ஒன்றுக்கு 03 புள்ளிகள் வீதம்) | | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்படும் குறித்த துறை பற்றிய மூன்று (03) மாத காலத்திற்குக் குறையாதவொரு சான்றிதழ் கற்கைநெறிக்கு (கற்கைநெறி ஒன்றுக்கு 02 புள்ளிகள் வீதம்) | | |

| | விடயம் | | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மேலதிக அனுபவம் :** | | 30 |
| | சட்டத்தரணி ஒருவராக அரசாங்க சேவையில் அல்லது தனியார்துறையில் பெற்றுக்கொண்ட அனுபவம் - 06 மாதங்களுக்குக் கூடியதும் ஓராண்டுக்குக் குறைந்ததும் - 02 புள்ளிகள் | | |
| | ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள். (அடிப்படைத் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சட்டத்தரணி ஒருவராகச் செயலாற்றிய 03 ஆண்டு சேவைக்காலம் நீங்கலாக) | | |
| | (20 ஆண்டுகளுக்குக் குறையாதவொரு சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி ஒருவரின் அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது நீதிபதி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் மேலதிக அனுபவத்தை எண்பிக்க வேண்டும்.) | | |
| 04 | **கணினிப் பிரயோக அறிவு :** | | 15 |
| | பல்கலைக்குழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பட்டமொன்றுக்காக தகவல் தொழில்நுட்பவியலை ஒரு பிரதான பாடமாகக் கொண்டு கற்றிருத்தல். | 15 | |
| | அரசாங்க அங்கீகாரம்பெற்ற ஒரு நிறுவகத்தில் ஓராண்டுக்குக் குறையாதவொரு தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய டிப்ளோமா கற்கைநெறிக்கு அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு | 10 | |
| | அரசாங்க அங்கீகாரம்பெற்ற ஒரு நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு | | |
| | ➢ 06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | ➢ 03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள் | 05 | |
| 05 | **ஆங்கிலமொழித் தேர்ச்சி :** | | 15 |
| | ஆங்கிலமொழிமூலம் கற்ற பட்டப்பின்படிப்பு பட்டம்/ பட்டம்/ பட்டப்பின்படிப்பு சட்டமாணிப் பட்டம்/ சட்டமாணிப் பட்டம். (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கிலமொழிமூலம் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்க அங்கீகாரம்பெற்ற நிறுவகமொன்றில் ஆங்கிலமொழி பற்றிய டிப்ளோமா ஒன்றுக்கு. (ஓராண்டு காலம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசாங்க அங்கீகாரம்பெற்ற நிறுவகமொன்றின் ஆங்கிலமொழி பற்றிய சான்றிதழ் கற்கைநெறியொன்றுக்கு. | | |
| | ➢ 06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | ➢ 03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள் | 05 | |
| 06 | **நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமை** | | 05 |
| | **முழு மொத்தம்** | | 100 |

**குறிப்பு**.- பதவியில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள், புற செயற்பாடுகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றிதழ்கள் மூலம் எண்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் கோரும் இறுதித்திகதிக்கு அத்தகைய தகைமைகள் செல்லுபடியானவையாக இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது மிகவும் கவனமாகவும் திருத்தமாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகள் குறித்து பரீட்சிக்கும்போது விண்ணப்பதாரி எவரேனும் தகுதியற்றவரெனத் தெரியவரின், எந்தவொரு வேளையிலும் அவரது அபேட்சகர் அந்தஸ்து இரத்துசெய்யப்படலாம். விண்ணப்பகாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தகவல் எந்தவொரு வேளையிலும் உண்மைக்குப் புறம்பானதெனத் தோன்றுமாயின், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

10. விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரியமைப்பைத் தழுவியதாக இருத்தல் வேண்டும். ஏ4 (3.27" X 11.69") அளவிலான கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், அபேட்சகரின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். கணினியின் உதவியுடன் தயாரித்த அல்லது தட்டச்சுசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களையும் இதற்குப் பயன்படுத்தலாம். தலைப்பு இல. 01 தொடக்கம் 06 வரையில் முதலாம் பக்கத்திலும், தலைப்பு 07 தொடக்கம் 11 வரையில் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் வருமாறு விண்ணப்பப்படிவம் தயாரித்துக்கொள்ளப்படல் வேண்டும். அதற்குரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக உட்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தழுவியமையாத விண்ணப்பப்படிவங்களும் முழுமைபெறாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) மேலும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதாக உள்ளதா என்பது குறித்து விண்ணப்பகாரர்கள் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படடுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் உரிய திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை அனுப்பிவைத்த எல்லா விண்ணப்பகாரர்களும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைக்கப்பட்டபோதும் விண்ணப்பகாரர் இப்பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று கருதப்படமாட்டா. விண்ணப்பகாரர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலின்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரா என்பது குறித்து ஆராயும் சந்தர்ப்பத்தில் அவசியமான தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்கவில்லை எனக் கண்டறியப்படுமாயின், அத்தகையவர்களின் அபேட்சகர் என்ற அந்தஸ்து இரத்துச்செய்யப்படும்.

12. அபேட்சகர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாளஅட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. விண்ணப்பக்காரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

13.1 தற்போது அரசாங்க சேவையிலுள்ளவர்களின் கையொப்பம் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் அல்லது அவ்வாறு செய்வதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

13.2 வெளிநிலை விண்ணப்பக்காரர்களின் கையொப்பம் அதிகாரம்பெற்ற ஆளொருவரினல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், பிரசித்தநொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் ஆணைபெற்ற ஓர் அலுவலர், பொலிசு சேவையில் செய்திநிரற்படுத்திய பதவியொன்றை வகிக்கும் ஓர் அலுவலர், ஆண்டுக்குரிய சம்பளமாக ரூ. 240,360 அல்லது அதற்குக் கூடுதலாக, அதேபோல் ஆண்டுக்குரிய சம்பள ஏற்றம் ரூ. 7,740 அல்லது அதற்கு கூடுதலாகப்பெறுகின்ற அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்ற ஓர் அலுவரினாலும் அல்லது அரசாங்க/மாகாண அரசாங்கசேவையிலுள்ள ஒருவராயின் தாபனத் தலைவரினாலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. இதனகத்துக் குறிப்பிடப்படாத விடயம் ஏதுமிருப்பின், அது சமபந்தமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட திட்டங்களின்படி ஒழுகுவதற்கு எல்லா விண்ணப்பகாரர்களும் கட்டுப்பட்டவர்களாவர்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். பீ. பீ. விக்ரமசிங்ஹ,
செயலாளர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்அமைச்சு.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள்அமைச்சு,
2017, யூலை 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சிறைச்சாலைத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016(2017)

බන්ධනාගාර දෙපාර්තමේන්තුවේ විධායක සේවා ගණයේ III ශ්‍රේණියේ නීති නිලධාරී තනතුරට බඳවා ගැනීම - 2016(2017)

Recruitment to the Post of Legal Officer Grade III of Executive Category in the Department of Prisons - 2016(2017)

அலுவலக பாவனைக்கு

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

உதாரணமாக : SILVA, A.B.C.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (தமிழில்/ சிங்களத்தில்) :----.

2. (அ) நிரந்தர முகவரி (தமிழில்/ சிங்களத்தில்) :----.

(நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் கடிதம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

(ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) திணைக்களமொன்றில் பணியாற்றுபவராயின், அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ஈ) திணைக்களத்தில் பணியாற்றுபவராயின், அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் நிலை :

பெண்-1, ஆண்-0

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

4. திருமணமானவரா ? திருமணமாகாதவரா ? :

திருமணமாகாதவர்-1

திருமணமானவர்-2

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

6. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

8. பிரஜாவுரிமை (பரம்பரை மூலமா/ பதிவின் மூலமா) :----.

9. கல்வித் தகைமைகளும் அனுபவமும் :

9.1 கல்வித் தகைமைகள் (பெற்றுக்கொண்ட எல்லாப் பட்டங்களிலும் அதிசிறப்பான சித்திகள், தொழில் அல்லது தொழில்நுட்பத் தகைமைகளின் விபரம், வகுப்பொன்று பெற்றிருப்பின், அப்பாடங்களையும் நிறுவகங்களையும் குறிப்பிடவும்.) :

| பரீட்சை/ பட்டம் | ஆண்டு | பாடங்கள் | நிறுவகம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

9.2 அனுபவம் :

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

10. தற்போது வகிக்கும் பதவி பற்றிய விபரம் :

(அ) பதவி :----.

(ஆ) திணைக்களம்/ அமைச்சு :----.

(இ) நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஈ) நிரந்தரமானதா/ ஓய்வூதியமுள்ளதா/ ஓய்வூதியமற்றதா/ தற்காலிகமானதா? :----.

(உ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா ? :----.

(ஊ) பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டமும் தற்போது பெறும் சம்பளமும் :----.

11. தாங்கள் எப்பொழுதாவது, ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவரெனில், குறிப்பிட்ட தவறும் விதிக்கப்பட்ட தண்டனையும் பற்றி விபரிக்கவும் :

---------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------

இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரமொன்று உண்மைக்குப் புறம்பானதென்றோ அல்லது தவறானதென்றோ நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டறியப்படுமாயின், அதன் காரணமாக இப்பதவிக்குத் தகுதியற்றவனாவதற்கும் இப்பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறு கண்டறியப்படுமாயின், இழப்பீடெதுவும் இன்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ செல்வி/ திருமதி ........................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர், ................................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

13. விண்ணப்பகாரர் அரசாங்க சேவையிலுள்ளவராயின், திணைக்களத் தலைவரின் சான்றுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./ செல்வி/ திருமதி ........................................................ இந்த திணைக்களத்தில்/ அமைச்சில்/ அலுவலகத்தில் பணி புரிகின்றாரென்றும் மேலே 10 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும்/கீழ்க்காணுமாறு திருத்தப்பட வேண்டுமென்றும், அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானதாக உள்ளதென்றும் நான் சான்றுரைக்கின்றேன். தற்போது வகிக்கும் பதவியிலிருந்து இவ்வலுவலரை விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்
(உத்தியோகபூர்வ இலச்சினையைப் பதிக்கவும்).

திகதி :----.

11-166

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### "காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல் - ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும், விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 7,500 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய, விண்ணப்பங்கள் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2017, ஒற்றோபர் 09.

**அட்டவணை**

1. பியகம - கம்பஹா மாவட்டத்தின் பியகமை, தொம்பை, களனி, வத்தளை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயாம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. காத்தான்குடி - மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று வடக்கு, தெற்கு, எருவில் மற்றும் போரைதீவு இறைவரிப் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

3. மாத்தளை - மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை நீதிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

4. கொழும்பு மேற்கு - கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட தெஹிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெபிலியான, மஹரகமை, பன்னிபிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்களுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

5. உடுநுவர - கண்டி மாவட்ட உடுநுவர இறைவரிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

6. தம்பலகாமம், கந்தளாய் - திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிப் பதவிக்கான விண்ணப்பம்**

காதிப் பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம் ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிரந்தர வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

திகதி மாதம் வருடம்

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. ஆ. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :

1. ----------------------------------------------------
2. ----------------------------------------------------
3. ----------------------------------------------------
4. ----------------------------------------------------
5. ----------------------------------------------------

12. தொழில் தகைமைகள் :

1. ---------------------------------------------------
2. ---------------------------------------------------
3. ---------------------------------------------------
4. ---------------------------------------------------
5. ---------------------------------------------------

13. விண்ணப்பதாரிக்கு எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள்:

| | |
|---|---|
| | |
| | |

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

15. விவாகமானவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி :

| ரூபா | |
|---|---|

19. மாதாந்த வருமானம் :

| ரூபா | |
|---|---|

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் :

| ரூபா | |
|---|---|

21. சென்ற பத்து (10) வருட காலப்பகுதியினுள் நீங்கள் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

22. நீங்கள் வருமானவரி செலுத்துமொருவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

23. உங்களுக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

| |
|---|
| |

25. உங்களைப் பற்றி நன்கறிந்துள்ள, உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உங்களையறிந்துள்ள காலப்பகுதி : | உங்களையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படுகின்ற சேவை முன் மூன்று வருட கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்கு ஆசிரிய மாணவர்களை அனுமதித்தல் – 2017

1.0 தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்காக ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும், தகவுதிறன்களையுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இது 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் சித்திபெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (புத்த சமயம், கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமயம் ஆகியன தொடர்பாக 4.5,4.8 ஆம் பகுதி மற்றும் வடிவமைப்பும் தொழில்நுட்பமும் தொடர்பாக 4.24.4 ஆம் பகுதியைப் பார்க்கவும்.)

1.2 தான் விண்ணப்பிக்கின்ற பாடநெறியின் கீழ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் மிகுந்த அவதானத்துடன் வாசித்து விளங்கிக்கொண்டு விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவது தொடர்பான பொறுப்பு விண்ணப்பதாரிகளுக்கு உரித்தாகும்.

1.3 வர்த்தமானி அறிவித்தலில் **"விண்ணப்பத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்"** நிரலில் 7.0 மற்றும் 7.1 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை தொடர்பாக விசேட கவனத்தை செலுத்த வேண்டும்.

1.4 விண்ணப்பப்படிவங்கள் 2017.11.24 ஆந் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். (10.5 பந்திக்கமைவாக இவ்விடயத்தை பின்பற்றவும்)

2.0 **தகவுத்திறன்.-**

சகல விண்ணப்பதாரிகளும் -

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த நடத்தை, சிறந்த உள மற்றும் உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 **வயது:**

2.3.1 2017.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.3.2 பௌத்தசமய, கத்தோலிக்க சமய, கிறிஸ்தவ சமய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கின்ற மதகுருமார்கள்/ சமயத்துறவிகள் 2017.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4 விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படை கல்வித் தகைமைகள்:**

3.1 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது ஆங்கிலம், பொது அறிவு பரீட்சைகள் இதற்கு உரித்தானவை அல்ல.)

3.2 சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஊடக மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) மற்றும் கணிதம் உள்ளடங்கலாக யாதேனும் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்த பட்சம் மூன்று (03) பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்க வேண்டும். இதன் போது முதற்தடவையில் க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஊடக மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) மற்றும் கணிதம் உள்ளடங்கலாக யாதேனும் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உள்ளடங்கலாக பிரதான ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு மூன்று (03) திறமை சித்திகளோடு சித்தியடைந்திருத்தல் கட்டாயமானதாகும்.

3.3 அவ்வப் பாடநெறிகளுக்குரிய க.பொ.த (சா.த.) பரீட்சையில் விசேட தகைமைகள் சகிதம் 3.2 இல் குறிப்பிட்டதற்கு அமைய இரு தடவைகளில் பூரணப்படுத்தாதுவிட்டால் மூன்றாவது தடவையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (விசேட தகைமை தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவது 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஆகும்.)

3.4 மேலும் ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அவசியமான விசேட தகைமைகள் அவ்வவ் பாடநெறிக்கு கீழே காட்டப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க :-**

இதன்போது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 2008 புதிய பாடத்திட்டத்தின்படி மற்றும் அதற்குமுன் நடைமுறைப்படுத்தப்பட்ட பழைய பாடத்திட்டத்தின்படி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

2008 – க.பொ.த (சா.த.) புதிய பாடத்திட்டத்தின் கீழ் கவனத்திற் கொள்ளப்படுகின்ற பாடங்கள் :-

1. பிரதான பாடங்கள்.-
(i)சமயம், (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும், (iii) ஆங்கிலம், (iv) கணிதம், (v) வரலாறு, (vi) விஞ்ஞானம்.

2. தொகுதிப் பாடங்கள்.-
(vii) முதலாவது தொகுதி பாடங்களில் யாதேனும் ஒரு பாடம், (viii) இரண்டாவது தொகுதி பாடங்களில் யாதேனும் ஒரு பாடம், (ix) மூன்றாவது தொகுதி பாடங்களில் யாதேனும் ஒரு பாடம்.

2008 க்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்ட க.பொ.த. (சா.த.) பழைய பாடத்திட்டத்தின் கீழ் கவனத்திற் கொள்ளப்படுகின்ற பாடங்கள்.-
(i) சமயம், (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும், (iii) ஆங்கிலம், (iv) கணிதம், (v) விஞ்ஞானமும் தொழிநுட்பமும், (vi) சமூகக்கல்வியும் வரலாறும், (vii) அழகியல் பாடங்களில் யாதேனும் ஒரு பாடம், (viii) தொழிநுட்பப் பாடங்களில் யாதேனும் ஒரு பாடம்.

ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கட்டாய பாடங்கள்–
(i) சிங்களம், (ii) பாளி, (iii) சமஸ்கிருதம், (iv) ஆங்கிலம், (v) கணிதம், (vi) திரிபீடக தர்மம்.

3.5 ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்கான ஆங்கில மொழித் தேர்ச்சி கீழ்க் காணுமாறு கவனத்திற் கொள்ளப்படும்.

3.5.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.5.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படுகின்ற போதிலும் ஆங்கில மொழி மூலமாகவும் ஏனைய மொழி மூலங்களில் க.பொ.த. (உ.த.) கற்ற விண்ணப்பதாரிகளும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

3.5.3 அனைத்து கற்பித்தல் செயற்பாடுகளும் பரீட்சையும் ஆங்கில மொழி மூலமே அமையுமென்பதால் ஆங்கில மொழி மூலம் கற்கக்கூடியவர்களே விண்ணப்பிப்பது சிறந்தது.

3.6 சித்திரம் / நடனம் (கீழைத்தேயம்) / நடனம் (பரதம்) / சங்கீதம் (கீழைத்தேயம்) / சங்கீதம் (கர்நாடகம்) / நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு தரப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z புள்ளி தகுதி அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவதோடு தெரிவு செய்யப்படுவது Z புள்ளித் தகுதி மற்றும் விண்ணப்பதாரி க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உரிய அழகியல் பாடத்துக்காக பெற்றுக்கொண்ட

சித்தித்தரங்களை இறங்குநிலை வரிசைத் தொடரொழுங்குக்கு அமைய தயாரிக்கப்பட்டு, அந்த முன்னுரிமை அடிப்படையிலாகும். அதன்படி உயர் Z புள்ளியோடு கூடிய உயர்ந்த சித்தித்தரத்தை உரிய அழகியல் பாடத்துக்கு பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.7 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி/ தொழில் சான்றிதழ்களினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் (2017.11.24) அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.

**4.0 ஒவ்வொரு பாடநெறிக்குமான தகைமைகள்.-**

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்த்துக் கொள்வதற்குரிய உரிய கல்வித் தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**கவனத்திற் கொள்க :**

“**தேர்ந்தெடுக்கப்படும் முன்னுரிமை தொடரொழுங்கு**” குறிப்பிடப்பட்ட பாடநெறிகளுக்கு அந்த தொடரொழுங்கு கவனத்திற் கொள்ளப்படுவது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்ல தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படும் போதாகும்.

**4.1 பாடநெறி இலக்கம் 01 - ஆரம்பக்கல்வி (சிங்களம்)**
**ஆரம்பக்கல்வி (தமிழ்)**

4.1.1 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழி/தமிழ் மொழி பாடத்துடனான விண்ணப்பதாரர்கள்,

4.1.1.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றி சிங்கள மொழி/ தமிழ்மொழி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஊடக மொழி (சிங்களம்/தமிழ்) மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.1.2 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி பாடம் அற்ற விண்ணப்பதாரர்கள்

4.1.2.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் பாடம் இல்லாத கலைப்பிரிவில் தோற்றி மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.1.2.2 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வர்த்தகம் / விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம்) / ஏனைய /தொழில்நுட்பம் பாடத்துறைப் பிரிவில் பயின்று மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஊடக மொழியில் (சிங்களம்/தமிழ்மொழி) விசேட சித்தியும், கணிதத்தில் திறமைச் சித்தியுடன், ஆங்கிலப் பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.1.3 **கவனத்திற் கொள்க :-**

(i) ஆட்சேர்க்கப்படுகின்ற போது க.பொ.த(உ.த) பரீட்சையில் தோற்றி கலைப்பிரிவில் சிங்களம்/ தமிழ் மொழியை ஒரு பாடமாக பயின்ற விண்ணப்பதாரிகளில் 60% உம்,

(ii) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தோற்றி சிங்களம்/ தமிழ் மொழியை பாடமாக தொடராது கலைப்பிரிவில் விண்ணப்பித்தவர்களில் 10% உம், விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்), வர்த்தக பாடத்துறைப் பிரிவுகளில் 10% படியும், வேறு, தொழில்நுட்பப் பாடத்துறைப் பிரிவுகளில் 5% படியுமாக தெரிவு செய்யப்படுவர்.

(iii) விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்), வர்த்தகம்,வேறு மற்றும் தொழில்நுட்பப் பாடத்துறைகளில் சேர்த்துக்கொள்வதற்குரிய தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் போதுமான அளவு இல்லாத போது க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியை பாடமாக தொடராத கலைப்பிரிவில் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

| | |
|---|---|
| ***4.2 பாடநெறி இலக்கம் 02 -*** | ***விஞ்ஞானம் (சிங்களம்)***<br>***விஞ்ஞானம் (தமிழ்)***<br>***விஞ்ஞானம் (ஆங்கிலம்)*** |

*4.2.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய உயிரியல் விஞ்ஞான பாடங்களுள் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.2.2* கணிதம், விஞ்ஞானம்/விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) இல் சித்தியடைந்திருத்தல்.

*4.2.3* **கவனத்திற் கொள்க.-**

*விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக.-* இந்தப் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் முழு மாணவ எண்ணிக்கையில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றி விண்ணப்பிப்பவர்களில் 60% உம், மிகுதி 40% வீதம் சிங்களம்/தமிழ் மொழி மூலம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தோற்றி விண்ணப்பிப்பவர்களிலிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படுவர். (சேர்த்துக் கொள்ளப்படும் போது ஆங்கில மொழிமூலம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரு பாடமாவது தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

| | |
|---|---|
| ***4.3 பாடநெறி இலக்கம் 03 -*** | ***கணிதம் (சிங்களம்)***<br>***கணிதம் (தமிழ்)***<br>***கணிதம் (ஆங்கிலம்)*** |

*4.3.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர்கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பௌதிக விஞ்ஞான பாடங்களில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.3.2* கணிதம்/விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*4.3.3* **கவனத்திற் கொள்க.-**

*கணிதம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக.-* இந்தப் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் முழு மாணவ எண்ணிக்கையில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றி விண்ணப்பிப்பவர்களில் 60% வீதமும், மிகுதி 40% வீதம் சிங்களம்/ தமிழ் மொழி மூலம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தோற்றி விண்ணப்பிப்பவர்களிலிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படுவர். (சேர்த்துக்கொள்ளப்படும் போது ஆங்கில மொழி மூலம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரு பாடமாவது தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

| | |
|---|---|
| ***4.4 பாடநெறி இலக்கம் 04 -*** | ***சமூக விஞ்ஞானம் (சிங்களம்)***<br>***சமூக விஞ்ஞானம் (தமிழ்)*** |

*4.4.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், புவியியல், பொருளியல் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒன்று உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

அத்துடன்

4.4.2 சமூகக்கல்வியும் வரலாறும் அல்லது வரலாறு/குடியுரிமைக்கல்வி / புவியியல் பாடங்களில் எவையேனும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/தமிழ்மொழி) மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.5 பாடநெறி இலக்கம் 05 - பௌத்த சமயம்**

பௌத்த சமயப் பாடநெறிக்கு பௌத்த பிக்குகளும்/ பிக்குணிகளும் மற்றும் புத்தசாசன அமைச்சின் கீழ் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தசசீல தாய்மார்களும் மற்றும் சாதாரணமானவர்களும் விண்ணப்பிக்கலாம்.

4.5.1 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌத்த சமயம், பௌத்த நாகரீகம்,சமஸ்கிருதம்,பாளி, சிங்களம் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.5.2 ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு திறமை சித்திகள் மூன்றுடன் (03) சித்தியடைந்திருத்தல்.

4.5.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.4 பிரசீன, ஆரம்பப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.5 அறநெறி சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.6 மதகுருமார்களுக்காக சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரியின் நிட்டம்புவ நிறுவனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 90 வெற்றிடங்களுக்காக போதுமான துறவற விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் சாதாரண விண்ணப்பதாரிகளிலிருந்து சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரியின் தம்பதெனிய நிறுவனத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

4.5.7 துறவற விண்ணப்பதாரிகளிடையே 2015 ஆம் வருடம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமான அளவில் இல்லாவிடின் 2014, 2013, 2012, 2011 முதலிய வருட தொடரொழுங்கில் அண்மித்த வருடத்தில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தி பெற்ற துறுவற / இல்லற விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

4.5.8 முன்னுரிமைப்படி முறையாக கீழே தெரிவு செய்யப்படுவதற்காக கவனத்திற் கொள்ளப்படுவது நிலவும் வெற்றிடங்களை கவனத்திற் கொண்டே ஆகுமென்பதை கவனத்திற் கொள்க.

தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை

(அ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.3 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.
(ஆ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.4 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.
(இ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.
(ஈ) 4.5.1 மற்றும் 4.5.2 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

**4.6 பாடநெறி இலக்கம் 06 - இந்து சமயம்**

4.6.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் இந்துசமயம், இந்து நாகரீகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒரு பாடம் உட்பட எல்லாமாக மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.6.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் இந்து சமயம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.6.3 சைவ சித்தாந்த பண்டிதர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.4 சைவப்புலவர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.5 இளம் சைவப்புலவர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.6 தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை

(அ) 4.6.1 மற்றும் 4.6.2 ஆகிய இரண்டும் உட்பட சகல சான்றிதழ்களும் உடைய விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.6.1, 4.6.2, 4.6.5 மற்றும் ஏனைய சான்றிதழ்களில் இரண்டு தகைமைகளில் ஒரு சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.6.1, 4.6.2 மற்றும் ஏனைய சான்றிதழ்களில் மூன்று தகைமைகளில் ஏதாவதொரு சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.6.1, 4.6.2 சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

**4.7 பாடநெறி இலக்கம் 07 - இஸ்லாம்**

4.7.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அரபு ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.7.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் இஸ்லாம் சமயம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.7.3 அல்-ஆலிம் (ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும், இறுதிப் பரீட்சையில் சகல பாடங்களிலும் ஆகிய இரண்டிலும்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.7.4 அல்-ஆலிம் ஆரம்ப பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

4.7.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.7.6 தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை

(அ) 4.7.1, 4.7.2, 4.7.3 மற்றும் 4.7.5 ஆகிய சகல சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.7.1, 4.7.2, 4.7.4 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(இ) 4.7.1, 4.7.2 மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.7.1 மற்றும் 4.7.2 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

**4.8 பாடநெறி இலக்கம் 08 - கத்தோலிக்க திருமறை/கிறிஸ்தவம் (சிங்களம்)**
**கத்தோலிக்க திருமறை/கிறிஸ்தவம் (தமிழ்)**

4.8.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரீகம் ஆகிய பாடங்களில் ஒன்று உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம் மற்றும் கத்தோலிக்க திருமறை / கிறிஸ்தவம் பாடம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

விண்ணப்பதாரி கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமய ஆசிரியராவதற்குத் தகைமை உடையவர் என கத்தோலிக்க சமயத்திற்காக கத்தோலிக்க மறை மாவட்ட ஆயரின் சான்றிதழையோ, கிறிஸ்த சமயத்திற்காக தேசிய கிறிஸ்தவ சபை சான்றிதழையோ பெற்றிருத்தல்.

4.8.2 **கத்தோலிக்க சமயத்துக்கு** விண்ணப்பிப்பவர்களின் தெரிவுகள் பின்வரும் தகைமைகளுக் கமைய முன்னுரிமை ஒழுங்கின்படி நடைபெறும்.

4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான 4 வருடகால பாடநெறிச் சான்றிதழ்;

அல்லது

4.8.2.2 தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்படும் மெய்யியல் பாடநெறிச் சான்றிதழ்;

அல்லது

4.8.2.3 இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் 3 வருட சமயக் கல்வி பாடநெறிச் சான்றிதழ்;

அல்லது

4.8.2.4 துறவியாவதற்கான சமயக் கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறியை (Novitiate) வெற்றிகரமாகத் தொடர்ந்து பூர்த்தி செய்தமைக்கான துறவற சபைத் தலைவரினால் அல்லது உரிய மறை மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்;

அல்லது

4.8.2.5 தேசிய மறைக்கல்வி மையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் (சமய ஆசிரியர்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அதாவது, மறையாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 03)

அல்லது

மறையாசிரியர் விசேட (சமய ஆசிரியர் 02)

அல்லது

மறையாசிரியர் சாதாரண (சமய ஆசிரியர் 01)

அல்லது

4.8.2.6 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கிறிஸ்தவ திருமறை/ கிறிஸ்தவ சமயம்/ கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

4.8.3 **கிறிஸ்தவ சமயத்துக்கு** விண்ணப்பிப்பவர்களைத் தெரிவு செய்யும் ஒழுங்குமுறை கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமை அடிப்படையில் நடைபெறும்.

4.8.3.1 பிலிமத்தலாவையில் உள்ள இலங்கை இறையியல் கல்லூரி டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.3.2 தேசிய கிறிஸ்தவ சபையினால் நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (மறை ஆசிரியர்) பெற்றிருத்தல்.

4.8.4 **கவனத்திற் கொள்க :-**

i. கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய (சிங்களமொழி /தமிழ்மொழி) பாடநெறிக்கு விண்ணப்பதாரர் களை தெரிவு செய்யும் போது அந்த அந்த மாவட்டங்களில் விண்ணப்பதாரர்களின் Z புள்ளி தகுதி ஒழுங்கு முறையில் தெரிவு இடம்பெறும்.

ii. சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த சாதாரண விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையில் 85% வீத தெரிவின் போது 4.8.1 இன் கீழ் தகைமையுள்ள கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகளுள் 4.8.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு முறைமைப்படி தெரிவு இடம்பெறும். 85% வீத கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

iii. சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில்15% வீதமானது 4.8.1 இன் கீழ் தகைமை பெறும் கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளிடையே 4.8.3 இன் கீழ் காட்டப்பட்ட ஒழுங்கு முறைப்படி தெரிவு இடம்பெறும். 15% வீதமான கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

iv. சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த விண்ணப்பதாரிகளுள் 40% வீதமானோர் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமாரிலிருந்து தெரிவு செய்யப்படுவர். 40% வீதமான மதகுரு விண்ணப்பதாரிகள் இல்லையாயின் அவ்வெற்றிடம் ஏனைய விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

v. மதகுருமார் விண்ணப்பதாரிகளில் 2015 ஆம் வருடம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2014, 2013, 2012, 2011 ஆம் வருடங்களை தொடராகக் கருத்திற்கொண்டு க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்த துறவற/ மதகுருமார்கள் விண்ணப்பதாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

### 4.9 பாடநெறி இலக்கம் 09 - முதலாம் மொழி (சிங்களம்)

4.9.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.9.2 சிங்கள மொழிக்கு திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

### 4.10 பாடநெறி இலக்கம் 10 - முதலாம் மொழி (தமிழ்)

4.10.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.10.2 தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

### 4.11 பாடநெறி இலக்கம் 11 - ஆங்கிலம்

4.11.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழி (பாட இலக்கம் - 73) உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன், ஊடக மொழி (சிங்களம்/ தமிழ்மொழி) மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.11.2 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.11.3 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது அதி திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/தமிழ் மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.11.4 **தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை**

(i) 4.11.1 இன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்.

இவர்கள் தெரிவு செய்யப்படுவது ஒவ்வொரு மாவட்ட மட்டத்தில் பெறப்பட்ட Z புள்ளி தகுதி ஒழுங்கு முறையிலாகும்.

(ii) 4.11.2 தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்

மேலும் வெற்றிடங்கள் இருக்குமாயின் இந்த வகுதியினரில் விண்ணப்பதாரிகள் அவர்களின் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் பெற்ற Z புள்ளித் தகுதியின் முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, அவர்களிடையே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவது விண்ணப்பதாரிகளின் Z புள்ளி தகுதி மற்றும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்திற்குப் பெற்ற சித்தியின் தரத்தின் மேலிருந்து கீழ்நோக்கி ஒவ்வொன்றை பொருத்தி அந்த தொடரொழுங்கிலாகும்.

(இதன் போது கவனத்தில் கொள்ளப்படுவது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்துக்கு பெற்றுக்கொண்ட விசேட சித்தி (A), அதி திறமைச்சித்தி (B) மற்றும் திறமைச்சித்தி (C) மட்டுமே).

(iii) 4.11.3 பிரிவிற்கமைய தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்.

மேலே (ii) இன் கீழ் தெரிவு செய்யப்பட்டதன் பிற்பாடு வெற்றிடங்கள் இருக்குமாயின் இவ்வகுதியில் விண்ணப்பதாரிகள் அவர்களின் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பெற்ற Z புள்ளி தகுதி தொடரொழுங்கில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, அவர்களில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவது விண்ணப்பதாரிகளின் Z புள்ளி தகுதி மற்றும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலமொழி பாடத்திற்கு பெற்ற சித்தித் தரத்தின் மேலிருந்து கீழ்வரை ஒன்றுடன் ஒன்று பொருத்தி தொடரொழுங்கிலாகும்.

**4.13 பாடநெறி இலக்கம் 13 - சித்திரம் (சிங்களம்)
சித்திரம் (தமிழ்)**

4.13.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்திரப் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.13.2 ஊடக மொழி (சிங்களம்/தமிழ்மொழி), கணிதம் மற்றும் சித்திரம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.13.3 4.13.1 மற்றும் 4.13.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்து கொண்ட விண்ணப்பதாரிகளுள் 3.6 பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4.13.4 **கவனத்திற் கொள்க.-**
(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2015 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்திரம் உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டத்தில் வசிக்கும் தோட்டத்தொழிலாளர் அல்லாத தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**4.14 பாடநெறி இலக்கம் 14 - நடனம் (கீழைத்தேயம்)**

4.14.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நடனம் (கீழைத்தேயம்) பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

4.14.2 சிங்கள மொழி, கணிதம் மற்றும் நடனம் (கீழைத்தேயம்) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.14.3 4.14.1 மற்றும் 4.14.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.6 வகுதியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**4.15 பாடநெறி இலக்கம் 15 - நடனம் (பரதம்)**

4.15.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நடனம் (பரதம்) உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.15.2 தமிழ்மொழி, கணிதம் மற்றும் நடனம் (பரதம்) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.15.3. 4.15.1, 4.15.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.6 ஆம் பகுதியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4.15.4 **கவனிக்கவேண்டியது.-**
(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2015 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நடனம் (பரதம்) உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டத்தில் வசிக்கும் தோட்டத்தொழிலாளர் அல்லாத தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

**4.16 பாடநெறி இலக்கம் 16 -சங்கீதம் (கீழைத்தேயம்)**

*4.16.1* *2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேயம்) பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்*

*மற்றும்*

*4.16.2* *சிங்கள மொழி, கணிதம் மற்றும் சங்கீதம் (கீழைத்தேயம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.16.3* *4.16.1 மற்றும் 4.16.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.6 ஆம் வகுதியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

**4.17 பாடநெறி இலக்கம் 17 - சங்கீதம் (கர்நாடகம்)**

*4.17.1* *2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*4.17.2* *தமிழ் மொழி, கணிதம் மற்றும் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.17.3* *4.17.1, 4.17.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.6 ஆம் பகுதியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*4.17.4.* **கவனிக்க வேண்டியது**.-
*(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2015 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டத்தில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அல்லாத தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)*

**4.18 பாடநெறி இலக்கம் 18 - மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்)**

*4.18.1* *2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*ஆங்கில மொழியில் திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;*

*அல்லது*

*4.18.2* *2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பாக நான்காம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல். (அறிமுறை மற்றும் செய்முறை);

அல்லது

4.18.3 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று(03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ்மொழி), கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் மேலதிக பாடமாக சித்தியடைந்திருத்தல்;

அல்லது

4.18.4 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

மேற்கத்தேய சங்கீதப் பாடத்தில் விசேட சித்தியும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.18.5 **கவனத்திற் கொள்க** :

(i) மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்தை பெற வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மேற்கூறப்பட்ட 4.18.1, 4.18.2, 4.18.3, 4.18.4 இன் கீழ் தொடரொழுங்கு முறையில் முன்னுரிமை வழங்கப்படும்.

**4.19 பாடநெறி இலக்கம் 19 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)**
**நாடகமும் அரங்கியலும் (தமிழ்)**

4.19.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.19.2 ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி), கணிதம், நாடகமும் அரங்கியலும் / நடனம் / சங்கீதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.19.3 4.19.1 மற்றும் 4.19.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.6 ஆம் வகுதியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4.19.4 **கவனத்திற் கொள்க.-**
ஆட்சேர்ப்பின் போது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தியெய்திய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். யாதுமொரு மாவட்டத்திலிருந்து க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் மட்டும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நடனம்/சங்கீதப் பாடம் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பது கவனத்திற்கொள்ளப்படும்.

**4.20 பாடநெறி இலக்கம் 20 - உடற்கல்வி (சிங்களம்)
உடற்கல்வி (தமிழ்)**

4.20.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.20.2 ஊடக மொழி (சிங்களம்/ தமிழ் மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.20.3 அங்கீகரிக்கப்பட்ட தடகள மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் சம்பந்தமானஅடைவுகள் / திறமைகள் பெற்றிருத்தல்.

பல்வேறு விளையாட்டுகள் உருப்படிகள்/மூன்றுக்காக முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு உயர்ந்த பட்ச புள்ளிகள் 75 வழங்கப்படும்.

4.20.3.1 விளையாட்டு/ நிகழ்ச்சி முன்னுரிமை தொடரொழுங்கு

| தொடர் இல. | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | சர்வதேச மட்டம் | தனி | - | 01 | 25 |
| 02 | சர்வதேச மட்டம் | தனி | - | 02 | 24 |
| 03 | சர்வதேச மட்டம் | தனி | - | 03 | 23 |
| 04 | சர்வதேச மட்டம் | - | குழு | 01 | 24 |
| 05 | சர்வதேச மட்டம் | - | குழு | 02 | 23 |
| 06 | சர்வதேச மட்டம் | - | குழு | 03 | 22 |
| 07 | சர்வதேச பிரதிநிதித்துவம் | தனி | குழு | - | 21 |
| 08 | தேசிய மட்டம் | தனி | - | 01 | 20 |
| 09 | தேசிய மட்டம் | தனி | - | 02 | 19 |

| தொடர் இல. | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 03 | 18 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 01 | 19 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 02 | 18 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 03 | 17 |
| 14 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள்/ பாடசாலை சங்கங்கள் | தனி | - | 01 | 16 |
| 15 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள் / பாடசாலை சங்கங்கள் | தனி | - | 02 | 15 |
| 16 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள் / பாடசாலை சங்கங்கள் | தனி | - | 03 | 14 |
| 17 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள் / பாடசாலை சங்கங்கள் | - | குழு | 01 | 15 |
| 18 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள்/ பாடசாலை சங்கங்கள் | - | குழு | 02 | 14 |
| 19 | மாகாண மட்டம்/ தேசிய கழகங்கள் / பாடசாலை சங்கங்கள் | - | குழு | 03 | 13 |
| 20 | றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 1 | - | - | - | 10 |
| 21 | ஜனாதிபதி சாரணியமும்/ பெண் சாரணியமும் | - | - | - | 10 |
| 22 | சாஜன்ட் மேஜர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2 | - | - | - | 09 |
| 23 | மாவட்ட மட்டம் | தனி | - | 01 | 10 |
| 24 | மாவட்ட மட்டம் | தனி | - | 02 | 09 |
| 25 | மாவட்ட மட்டம் | தனி | - | 03 | 08 |
| 26 | மாவட்ட மட்டம் | - | குழு | 01 | 09 |
| 27 | மாவட்ட மட்டம் | - | குழு | 02 | 08 |
| 28 | மாவட்ட மட்டம் | - | குழு | 03 | 07 |
| 29 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 01 | 06 |
| 30 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 02 | 05 |
| 31 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 03 | 04 |
| 32 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 01 | 05 |
| 33 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 02 | 04 |
| 34 | வலயம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 03 | 03 |

4.20.4 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றி அவர் சித்தி பெற்றுக்கொண்ட தரத்தினடிப்படையில் பின்வருமாறு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்:-

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02
S சித்தி - 01

4.20.5 **கவனத்திற் கொள்க :**

(i) உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவு செய்யும் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் விண்ணப்பதாரர்களினது விளையாட்டுத் திறமை புள்ளி வரிசை ஒழுங்கு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். (4.20.3.1 பந்திக்கு இணங்க)

(ii) சேர்த்துக் கொள்ளும் போது தடகள விளையாட்டுகள், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் காற்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுகளுக்கு 60% ஏனைய அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளுக்கு 40% என்றவாறாக தெரிவு செய்யப்படுவார்கள்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) – கல்வியமைச்சு / விளையாட்டு அமைச்சு மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகங்களுக்கூடாக (சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கை தேசிய விளையாட்டுக் குழுவினை, அல்லது பாடசாலை தேசிய விளையாட்டுக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருத்தல். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது). மேலும் சர்வதேச போட்டி சான்றிதழ் கவனத்திற்கொள்ளப்படுவது குறைந்த பட்சம் மாகாண மட்டத்திலாவது விளையாட்டுக்கான வெற்றியை பெற்றிருப்பின் மாத்திரமே ஆகும். அவ்வாறில்லாவிடின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(iv) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி - கல்வியமைச்சு/ விளையாட்டு அமைச்சு/ தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

மாகாணக் கல்வியமைச்சு/ மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண விளையாட்டு அமைச்சு /தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான/பிரதேச செயலகப் பிரிவு மட்ட விளையாட்டுப் போட்டிகள்/மாகாண கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

(v) விளையாட்டு அமைச்சில் அல்லது கல்வியமைச்சில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களினூடாக ஒழுங்கு செய்யப்பட்ட "A' தரத்திலான போட்டிகளில் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(vi) 2011.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரையான பகுதியில் பெறப்பட்ட விளையாட்டு அடைவுகள்/திறமைகள் இதன் பொருட்டு செல்லுபடியாகும். (கவனத்திற் கொள்க- இந்தக் காலப்பகுதிக்கு முன்னதான அல்லது பின்னதான சான்றிதழ்கள் செல்லுபடியாகாது.)

(vii) விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றுக்கு புள்ளி வழங்கும் போது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதிகூடிய ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

(viii) இதன்போது விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் பாடசாலை விளையாட்டுக் கழகங்களிடையான கீழ்க்காணும் விளையாட்டுகள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| பேட்மிண்டன் | ரக்பி காற்பந்து | தடகள விளையாட்டு |
| நீர் விளையாட்டு (நீச்சல்) | சுமை உயர்த்தல் | கிறிக்கெட் |
| ஜுடோ | காற்பந்து | கைப்பந்து |
| சைக்கிளோட்டம் | ஜிம்னாஸ்டிக் | வலைபந்து |
| எல்லை | மேசைப்பந்து | வூஸ்சு |
| ஹொக்கி | மல்யுத்தம் | டெனிஸ் |
| கராத்தே | கூடைப்பந்து | பொக்ஸிங் |
| டைகொண்டோ | மென்பந்து கிறிக்கெட் | கபடி |
| துரோ போல் | கரப்பந்து | பேஸ்போல் |

**4.21 பாடநெறி இலக்கம் 21 - மனைப்பொருளியல் (சிங்களம்)**
**மனைப்பொருளியல் (தமிழ்)**

*4.21.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*4.21.2 ஊடக மொழி (சிங்களம் / தமிழ்மொழி), கணிதம், விஞ்ஞானம்/விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**4.22 பாடநெறி இலக்கம் 22 - விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்)**
**விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்)**

*4.22.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*கணிதம் மற்றும் விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம்/ தமிழ்மொழி) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.22.2 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிர் முறைமை தொழில்நுட்பம்/ தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்/விவசாய விஞ்ஞானம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*அத்துடன்*

*கணிதம், விஞ்ஞானம் / விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், ஊடக மொழி (சிங்களம் / தமிழ்மொழி) உட்பட (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.22.3 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம் / விவசாய தொழில்நுட்பவியல் / உயிரியல் வளத் தொழில்நுட்பவியல் / உணவுத் தொழில்நுட்பவியல் உட்பட வேறு இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*கணிதம், விஞ்ஞானம் / விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி) உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**4.22.4 கவனத்திற் கொள்க.-**
*தெரிவிற்கான முன்னுரிமை தொடரொழுங்கு*

*(அ) 4.22.1 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.*
*(ஆ) 4.22.2 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.*
*(இ) 4.22.3 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.*

**4.23 பாடநெறி இலக்கம் 23 - தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (சிங்களம்)**
**தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (தமிழ்)**

*4.23.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.23.2 கணிதம் மற்றும் ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி), கலையும் கைப்பணியும் / சிற்பக்கலை உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**4.24 பாடநெறி இலக்கம் :**

24 - **A** வடிவமைப்பும் கட்டிடத்தொழில்நுட்பமும் (சிங்களம்)
24 - **B** வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)
24 - **C** வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)
24 - **A** வடிவமைப்பும் கட்டிடத்தொழில்நுட்பமும் (தமிழ்)
24 - **B** வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (தமிழ்)
24 - **C** வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (தமிழ்)

4.24.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாடப்பிரிவுக்காக பாடமாக அனுமதிக்கப்பட்ட பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.24.2 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வன்பொருள் தொழில்நுட்பவியல் பாட பிரிவில் குடிசார் தொழில்நுட்பவியல்,பொறிமுறைத் தொழில்நுட்பவியல், மின் இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.24.3 கணிதம் மற்றும் ஊடக மொழி (சிங்களம்/தமிழ்மொழி), நிர்மாணத் தொழில்நுட்பம்/ இயந்திரத் தொழில்நுட்பம்/ மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்/ ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.24.4 கவனத்திற் கொள்க :**

(i) தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர்

(அ) **4.24.1, 4.24.3** ஆகிய சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.
(ஆ) **4.24.2, 4.24.3** ஆகிய சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.

அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ), (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதியளவு இல்லாதவிடத்து2014 மற்றும் 2013ஆம் வருடங்களில் (அ) அல்லது (ஆ) தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தொடரொழுங்கில் கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

(ii) விண்ணப்பப்பத்திரத்தில் 1.0 இன் கீழ் விண்ணப்பிக்கும் பாடத்துறை வடிவமைப்பும் நிர்மாண தொழில்நுட்பமும்/வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும்/வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக மேலே குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**4.25 பாடநெறி இலக்கம் 25 - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) :**

4.25.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்;

அத்துடன்

ஆங்கிலமொழி பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் கணிதம், ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.25.2 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

ஆங்கில மொழி பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம் / தமிழ்மொழி) கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.25.3 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச் சித்தியுடன் ஊடக மொழி(சிங்களம் / தமிழ் மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.25.4 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

ஆங்கில மொழிப்பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.)

4.25.5 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலை, வணிகம், தொழில்நுட்ப மற்றும் பிற பாடத்துறை பிரிவுகளில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச் சித்தியுடன் ஊடக மொழி (சிங்களம் / தமிழ் மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.25.6 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் தெரிவு ஏனைய பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் முறையில் அமைந்தாலும் அவர்களுக்கான இப்பாடநெறி நடாத்தப்படுவது றுவன்புர தேசிய கல்வியியற் கல்லூரியிலாகும்.

4.25.7 **கவனத்திற் கொள்க.-**
தெரிவிற்கான முன்னுரிமை ஒழுங்குமுறை
(ஒவ்வொரு மாவட்டத்தில் பெறப்பட்ட Z புள்ளி திறமை தொடர் ஒழுங்குமுறையிலாகும்.)

(i) 4.25.1 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(ii) 4.25.2 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(iii) 4.25.3 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(iv) 4.25.4 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(v) 4.25.5 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.

**4.30 பாடநெறி இலக்கம் 30 - இரண்டாம் மொழி (சிங்களம்) :**

4.30.1 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

4.30.2 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.30.3 **கவனத்திற் கொள்க.-**
இப்பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளும்போது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது விருப்பத்திற்குரிய தமிழ்ப் பாடத்தில் சித்தியடைந்த தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

**4.31 பாடநெறி இலக்கம் 31 - இரண்டாம் மொழி (தமிழ்)**

4.31.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

4.31.2 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.31.3 **கவனத்திற்கொள்க.-**
இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்த அல்லது விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

**4.32 பாடநெறி இலக்கம் 32 - விசேட கல்வி (சிங்களம்)**
**விசேட கல்வி (தமிழ்)**

4.32.1 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.32.2 ஊடக மொழி (சிங்களம் / தமிழ்மொழி), கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.32.3 **கவனத்திற் கொள்க.-**
இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய செவிடர், குருடர், மந்தபுத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வேறு பலவீனங்கள் போன்ற மாணவர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்குவது கவனத்திற் கொள்ளப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும். (கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை இல 42/2012 கல்விச் செயலாளரின் இல. ED/9/18/8/2/6 மற்றும் 2017.05.17 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்துக்கு அமைவாக)

அத்துடன் இந்தப் பாடநெறியின் பயனாளிகள் விசேட தேவைகளுடைய மாணவர்களாகும். அத்தகைய மாணவர்களுக்கு உதவும் வகையில் மனத்தைரியமும், உடல் ஆரோக்கியமும் இல்லாத விண்ணப்பதாரர்கள் இப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**விசேட கவனத்திற் கொள்க:-**

*கீழே கொடுக்கப்பட்ட விடயங்கள் 2018 ஆம் வருடத்துக்கோ அல்லது அதற்கு பின் வருகின்ற வருடங்களிலோ சேர்த்துக்கொள்ளுதல் சம்பந்தமாக உங்களது முன் அறிவித்தலுக்காக தரப்படுகின்றன.*

* *2018 ஆம் வருடத்தில் சிற்பக்கலை பாடநெறி அகற்றப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

* *2018 ஆம் வருடத்துக்கான 2016 க. பொ. த. (உ. த.) பெறுபேற்றின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு தெரிவு செய்யும் போது தரம் 12 இல் பொது தகவல் தொழில்நுட்பம் (GIT) பாடத்தில் சித்தி கருத்திற்கொள்ளப்படும்.*

5.0 **பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :**

தயவு செய்து இப்பட்டியலை நன்கு வாசிக்கவும். நேர்முகப்பரீட்சையின் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணணிப் பட்டியலை தயாரிக்கும் போது தங்களது விண்ணப்பம் கணணிப்படுத்தப்படுவது பாடநெறி இலக்கத்திற்கு அமையவே. சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கல்வி அமைச்சிலுள்ள கல்வியியற் கல்லூரிக் கிளைக்கு கிடைக்கப்பெற்ற பின்பு அதில் எவ்வித மாற்றங்களும் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.அவ்வாறு இருந்த போதிலும் எந்தப் பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிக்குள் அனுமதித்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பது கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு / கல்விச் செயலாளருக்கு உரித்தாகும்.

(i) நிரல் – பாடநெறி இலக்கம்

(ii) நிரல் – பாடநெறியின் பெயர்

(iii) நிரல் – சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்

(iv) நிரல் – தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்

(v) நிரல் – ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்.

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியும் நடாத்தப்படுகின்ற கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| i | ii | iii | iv | v |
| 01 | ஆரம்பக்கல்வி | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | ஸ்ரீபாத | - |
| | | மகாவலி | அட்டாளைச்சேனை | - |
| | | சாரிபுத்த(தும்பதெனிய) | மட்டக்களப்பு | - |
| | | ஸ்ரீபாத | யாழ்ப்பாணம் | - |
| | | பஸ்துன்ரட்ட | தர்காநகர் | - |
| | | புலதிஸிபுர | - | - |
| | | வயம்ப | - | - |
| | | றுவன்புர | - | - |
| | | ருகுணு | - | - |
| | | ஹாபிடிகம | - | - |
| | | மஹரகம | - | - |

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியும் நடாத்தப்படுகின்ற கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| i | ii | iii | iv | v |
| 02 | விஞ்ஞானம் | நில்வளா | வவுனியா | நில்வளா |
| | | சியனை | ஸ்ரீபாத | சியனை |
| | | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | யாழ்ப்பாணம் |
| | | | மட்டக்களப்பு | - |
| | | | யாழ்ப்பாணம் | - |
| 03 | கணிதம் | நில்வளா | வவுனியா | நில்வளா |
| | | சியனை | ஸ்ரீபாத | சியனை |
| | | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | யாழ்ப்பாணம் |
| | | | யாழ்ப்பாணம் | - |
| 04 | சமூக விஞ்ஞானம் | ருகுணு | ஸ்ரீபாத | - |
| | | ஸ்ரீபாத | மட்டக்களப்பு | - |
| 05 | பௌத்த சமயம் | சாரிபுத்த /நிட்டம்புவ, தம்பதெனிய | - | - |
| 06 | இந்து சமயம் | - | வவுனியா | - |
| 07 | இஸ்லாம் | - | அட்டாளைச்சேனை | - |
| 08 | கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் | வயம்ப | வவுனியா | - |
| 09 | முதலாம் மொழி (சிங்களம்) | வயம்ப | - | - |
| | | பேராதெனிய | - | - |
| 10 | முதலாம் மொழி (தமிழ்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | தர்காநகர் | - |
| | | - | பேராதெனிய | - |
| 11 | ஆங்கிலம் | - | - | மகாவலி |
| | | - | - | பஸ்துன்ரட்ட |
| | | - | - | யாழ்ப்பாணம் |
| | | - | - | பேராதெனிய |
| 13 | சித்திரம் | மகாவலி | ஸ்ரீபாத | - |
| | | வயம்ப | மட்டக்களப்பு | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 14 | நடனம் (கீழைத்தேயம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| 15 | நடனம் (பரதம்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 16 | சங்கீதம் (கீழைத்தேயம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| 17 | சங்கீதம் (கர்நாடகம்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 18 | மேற்கத்தேய சங்கீதம் | - | - | மகரகம |
| 19 | நாடகமும் அரங்கியலும் | மகாவலி | மட்டக்களப்பு | - |
| | | வயம்ப | - | - |
| 20 | உடற்கல்வி | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | மட்டக்களப்பு | - |
| | | ருகுணு | | - |
| 21 | மனைப் பொருளியல் | ருகுணு | வவுனியா | - |
| | | | தர்காநகர் | - |

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியும் நடாத்தப்படுகின்ற கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| i | ii | iii | iv | v |
| 22 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | புலதிஸிபுர | வவுனியா | - |
| 23 | தொழில்நுட்பக் கற்கை– கலையும் கைப்பணியும் (சிற்பக் கலையும்) | சியனை | மட்டக்களப்பு | - |
| 24 | வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பவியலும் / வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பவியலும்/ வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில் நுட்பவியலும் | சியனை | மட்டக்களப்பு | - |
| 25 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | - | றுவன்புர |
| | | - | - | மஹரகம |
| 30 | இரண்டாம் மொழி (சிங்களம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| | | ஊவா | - | - |
| 31 | இரண்டாம் மொழி (தமிழ்) | - | மகாவலி | - |
| | | - | வவுனியா | - |
| 32 | விசேட கல்வி | ஹாபிடிகம | அட்டாளைச்சேனை | - |
| | | மஹரகம | யாழ்ப்பாணம் | - |

**கவனத்திற் கொள்க :**

- தமிழ் மொழி மூலம் பாடநெறி நடாத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பெண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

6.0 **2017 ஆம் ஆண்டிற்கு மாணவ ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைமை.**

6.1 ***தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :***

6.1.1 2020 ஆம் வருடத்தில் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதினால் பாடசாலைத் தொகுதியில் ஏற்படும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறை மற்றும் கஷ்ட பிரதேசங்களில் பாட பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு பாட அடிப்படையில் ஆசிரியர் தேவையைக் கணக்கிட்டு 2017 ஆம் வருடத்தில் ஒவ்வொரு பாடநெறிக்கும் இருக்கின்ற இடவசதி அளவோடு பொருந்துமாறு உள்ளெடுக்கப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய கஷ்டப் பிரதேச மாவட்டங்களில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் முதலிய பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் முழு எண்ணிக்கையில் அதிக சதவீதம் ஒதுக்கப்படும்.

சேர்த்துக்கொள்ளப்படும் தொகையினர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது கல்வியியற் கல்லூரிகளில் ஒவ்வொரு பாடநெறிக்கும் வசதிகள் வழங்கப்படக்கூடிய எண்ணிக்கையாகும்.

6.1.1.1 அதன்படி 2017 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக கீழ்க்காணும் இரண்டு அடிப்படைகள் பின்பற்றப்படும்.

(i) யாதும் ஒரு பாடநெறிக்குரிய சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை நாட்டிலுள்ள மாவட்டங்கள் இருபத்தைந்து அல்லது உரிய மொழிமூலத்தால் பாடத்தைக் கற்பிக்கும் மாவட்டங்களை தழுவுமாறு மாவட்ட அடிப்படையில் உயர் தகைமையைக் கொண்ட விண்ணப்பதாரிகளின் Z புள்ளி கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

(ii) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை பெருந்தோட்ட மாவட்டங்களில் வாழ்ந்து உயர் தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் Z புள்ளியை கருத்திற் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6.1.2 கத்தோலிக்க / கிறிஸ்தவ சமய பாடநெறி மற்றும் உடற்கல்வி பாடநெறி தவிர்ந்த ஏனைய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் அடிப்படையானது 6.1.1.1 இல் குறிப்பிடப்பட்ட சேர்த்துக்கொள்ளப்படும் அடிப்படைக்கு உரியதாக Z புள்ளி தொடரொழுங்கிலாகும்.

Z புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில் ஒரே Z புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது / விளையாட்டுத் திறமையடிப்படையில் ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது, முதற் தடவையாக க.பொ.த (சா.த) பரீட்சையில் பெற்றுக் கொண்ட பெறுபேறு கருத்திற் கொள்ளப்படும்.

அதற்கமைய விசேட சித்திக்கு 04 புள்ளிகளும், அதி திறமைச்சித்திக்கு 03 புள்ளிகளும், திறமைச்சித்திக்கு 02 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 01 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதான ஆறு (06) பாடங்களுக்கு மாத்திரம் (3.3 இல் குறிப்பிட்ட) வரையறுக்கப்பட்டுள்ளது.
(தொகுதிப் பாடங்கள் மற்றும் தெரிவுப் பாடங்கள் இதற்கு உரித்தானவை அல்ல.)

6.1.3 உடற்கல்வி,நடனம் (கீழைத்தேயம்), நடனம்(பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்) மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய பாடத்துக்கு அமைவாக தேர்ச்சி மட்டத்தை உறுதி செய்ய வேண்டும்.

6.1.4 மாவட்ட மட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும்போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் மாகாண மட்ட தகைமை / தேசிய மட்ட தகைமை கவனத்திற் கொள்ளப்பட்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

### 6.2 *நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தல் :*

6.2.1 மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும்போது விண்ணப்பதாரி, அவர் முதன் முறையாக க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

மாகாண மட்ட தகைமை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது முதன்முறையாக க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பதாரியின் மாகாணமாக கொள்ளப்படும்.

1. சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பதாரியினால் நிரந்தர வதிவிடம் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் பிரதியூடாக உறுதி செய்ய வேண்டும்.

2. ஏதாவது காரணத்தால் மூன்று (03) வருடங்கள் அல்லது சில வருடங்களுக்கு உரிய வாக்காளர் பதிவூடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய முடியாமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தைகிராமஅலுவலரினால்வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை சம்பந்தமான சான்றிதழ் (DS -04) ‘வேறு காரணங்கள்’ என்பதன் கீழ் நிரந்தர வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலர் கையொப்பத்துடன் பிரதேச செயலாளரின் இணை ஒப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரியின் வயது பூரணமாகாத காரணத்தால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட முடியாத வருடங்களுக்காக பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் பெயர்ப்பட்டியல் பதிவூடாக வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

4. யாதுமொரு காரணத்தினால் பெற்றோர்கள் அல்லாது வேறு பாதுகாவலரின் கீழ் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரி அந்தப் பாதுகாப்பிலிருந்த காலப்பகுதியோடு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழ் (DS - 04) 'வேறு காரணங்கள்' என்னும் பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் வாக்கு இல்லாத வருடத்திற்காக பாதுகாவலரின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் ஊடாக வதிவிடத்தை உறுதி செய்ய வேண்டும்.

5. ஒரு வருடத்திற்கோ அல்லது இரு வருடங்களுக்கோ மட்டும் உரிய வாக்காளர் இடாப்பின் பதிவு முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வருடங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆவணங்களினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (உதாரணம்: கிராம அலுவலர் சான்றிதழ், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டையின் முகவரி)

### 6.3 *ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல்.*

6.3.1 வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்கள் மூலமும் நிரப்பப்படும். (இதன் போது இந்திய வம்சாவளியென்பதை நேரடியாகவோ அல்லது வேறு ஆதாரங்கள் சகிதம் நிரூபிக்க வேண்டும்.)

6.3.2 பெருந்தோட்ட மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது

6.3.3 ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத்துறையில் தொழில்புரியும் தொழிலாளர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும்.

6.3.4 சமகாலத்தே பெருந்தோட்டங்களில் தொழில்புரியும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் தற்போது தோட்டங்களில் வசிக்கும் பெருந்தோட்ட துறையில் 10 வருடங்கள் சேவையாற்றிய பின் 2006 - 2015 வருட காலப்பகுதியில் ஓய்வு பெற்ற அல்லது சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.5 6.3.3 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் போதியளவில் காணப்படாவிடில் பெருந்தோட்டப்பகுதிகளில் தற்போது சேவைபுரியாவிடினும் 2006 அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து(05), நான்கு(04), மூன்று (03) வருடங்கள் தொடர்ந்து சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2014, 2013, 2012 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில்.)

6.3.6 ஏதாவது தமிழ்மொழி மூல பாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வதிகின்ற தோட்டங்களில் வேலை செய்யாத இந்திய வம்சாவளி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

6.3.7 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வதிகின்ற இந்தியவம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.8 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்டம் அமைந்துள்ள மாவட்டத்தில் வதிந்துள்ள பெருந்தோட்டப்பகுதி வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்களை ஸ்ரீபாத /ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அவர்களின் Z புள்ளியின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுவர்.

6.3.9 நேர்முகப்பரீட்சையின்போது அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் அதனை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் தமக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

- தற்போது பெருந்தோட்டங்களில் சேவையில் இருக்கும் தோட்டங்களில் சேவை செய்கின்றார்கள் எனவும் (அந்தக் காலப்பகுதியை குறிப்பிட்டு) மற்றும் நிரந்தரமாக தோட்டங்களில் வதிவது தொடர்பாக தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம்.

- பத்து (10) வருடங்கள் சேவையின் பின் 2006 – 2015 காலப் பகுதியில், சுகயீனம் காரணமாக பெருந்தோட்ட சேவையில் இருந்து விலகிக் கொண்ட /ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது இறந்து போன தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வசிப்பது தொடர்பாக உரிய வதிவிடப் பதிவு மற்றும் சேவையில் இருந்து விலகிய / ஓய்வு பெற்ற வருடம் மற்றும் தினம் தெளிவாக உறுதி செய்யப்பட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் கிராமசேவையாளர் சான்றிதழ்.

- பெருந்தோட்ட சேவையில் 2006 அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் ஓய்வு பெற்றுள்ள /பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய தொழிலாளர்கள் தாம் கடந்த ஐந்து (05) வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக சேவையாற்றியமை குறித்து ஓய்வு பெற்ற /பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய வருடம், திகதி என்பன தெளிவாக குறிப்பிட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- ஊழியர் சேமலாப (EPF) நிதியத்திற்கு பணம் அறவிடுவதாக பதிவு இலக்கத்துடன் உறுதி செய்யக்கூடிய கடிதம் அல்லது தோட்டத்தை வதிவிடமாகக் கொண்டமை குறித்த கிராமசேவகர் வழங்கிய கிராம சேவகர் சான்றிதழ்.

6.3.10 விண்ணப்பதாரி கற்கையின் பின்னர் பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளில் தொடர்ச்சியாக பத்து (10) வருடங்கள் சேவையாற்றுவதற்கு சம்மதிப்பதாக சத்தியப் பிரமாணத்தை நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**6.4 கவனத்திற் கொள்க :-**

6.4.1 சிங்கள மொழிமூலம் கல்வி கற்கும் இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ் மொழிமூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

6.4.2 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடாத்தப்படுகின்ற பாடநெறிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர் விண்ணப்பதாரிகளுக்கு தகைமைக்கேற்ப ஏனைய பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

**7.0 தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள் :**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினத்தில் சமர்ப்பிக்க தயாராக இருக்கவேண்டும். அந்தந்த மாவட்டத்தில் வெற்றிட எண்ணிக்கையை விட மூன்று மடங்கு எண்ணிக்கை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும். உரிய தினத்தில் முறையான அறிவித்தல் எதுவுமின்றிச் சமுகமளிக்காவிடின் அந்தந்த மாவட்டத்தில் அவ்வெற்றிடத்திற்கு அந்தந்த மாவட்டத்தில் தகைமை தொடரொழுங்கில் வேறு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவதுடன் சமுகமளிக்காதோர் தொடர்பாக மீண்டும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.2 அனைத்து சான்றிதழ்களுக்கும் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சைத் தினத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் அத்தினத்தில் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்துஆசிரிய தொழிலுக்குள் நுழைய விண்ணப்பதாரிகளிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உள தகவுதிறன், கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகள் அடிப்படையில் முதலாவது நேர்முகப்பரீட்சையின் போது உரிய நேர்முகப்பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும். அதன் போது பாடநெறியை தொடருவதற்கு மற்றும் ஆசிரிய தொழிலுக்குள் நுழைவதற்கு விண்ணப்பதாரியின் உடல், உள தகவுதிறன் போதுமானது என்பது தொடர்பாக அவரின் பெயர் விதப்புரையில் முன்வைக்கப்படும்.

7.4 மேலே 7.3 வகுதியின் படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பதிவுத் தபால் மூலம் அது குறித்து அறிவிக்கப்படும். கல்வியியற் கல்லூரிகளில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் நேர்முகப்பரீட்சை சபையினால் முன்வைக்கப்பட்ட தரவுகளின் பிழையற்ற தன்மை உறுதிசெய்துகொள்ளப்படும். உரிய தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவுசெய்துகொள்ளும் தினத்திலிருந்து பத்து (10) வேலைநாட்களுக்குள் பதிவு மேற்கொள்ளப்படாவிடின் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் இழக்கவேண்டியேற்படும். அதனால் ஏற்படும் வெற்றிடம் சேர்த்துக்கொள்ளப்படும் நியதியின் கீழ் உரிய தேர்ச்சி தொடரொழுங்குக்கமைய நிரப்பப்படும்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் பின்னர் மேற்கொள்ளும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மேற்கூறிய இல 7.3 அல்லது 7.4 இன் கீழ் நேர்முகப்பரீட்சை சபையினால் விதப்புரை செய்ய முடியாத பட்சத்தில் யாதும் விசேட பிரச்சினை காணப்படும் பட்சத்தில் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப்பரீட்சை சபை திருப்தியடையாத பட்சத்தில் விடயம் விசேட நேர்முகப்பரீட்சை சபைக்கு உட்படுத்தப்படும். அந்த சபை அறிக்கையை கல்வியியற் கல்லூரி சபைக்கு /கல்விச் செயலாளருக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

7.5 முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்யவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களை அனுமதிப்பதற்கு பொருத்தமான உடல், உள தேகாரோக்கியம் கொண்டவர் என உறுதிசெய்வதற்காக வைத்திய பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

7.6 ஏதாவதொரு பாடநெறிக்கு / தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அப்பாடநெறி / தேசியக் கல்வியியற் கல்லூரியை மாற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

7.7 ஏதாவதொரு பாடநெறிக்கு போதியளவு மாணவர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறி நடாத்தப்படுகின்ற அண்மையில் உள்ள வேறு கல்வியியற் கல்லூரிக்கு பாடநெறியைத் தொடர அமர்த்தப்படுவர்.

7.8 போதியளவு ஆசிரியர் தேவை இல்லாத பாடநெறி இரத்துச் செய்யப்படுதல், சேர்த்துக்கொள்ளும் பயிலுனர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் மற்றும் ஒவ்வொரு பாடநெறியையும் நிறுவனங்களில் நிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளர் வசமானதாகும்.

8. பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள்

8.1 ஏற்கனவே அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலைகளில், அரசில் பதிவுசெய்த பிரிவெனாக்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்விக்கூடங்களில் நியமனம் பெற்றுள்ளவர்கள்,

8.2 அரச பாடசாலைகளில் நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோர்,

8.3 தற்போதுவரைக்கும் தேசிய கல்வியியற் கல்லூரியில் பாடநெறியைத் தொடராது கைவிட்டவர்கள் அல்லது தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் அல்லது தொடர்ந்து பூர்த்தி செய்தவர்கள்,

8.4 பல்கலைக்கழகம் / பல்கலைக்கழக கல்லூரி / ஏனைய உயர்கல்வி நிறுவகம் / க.பொ.த. (உ.த.) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் தொழிற்பயிற்சி பாடநெறி / உயர் டிப்ளோமா /பட்டப் பாடநெறி தொடர்வதற்காக 'அரச இலவசக் கல்வி வாய்ப்பு' என்பதன் கீழ் உள்வாரியாக பதிவுசெய்துள்ள / தொடரும் அல்லது பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்திசெய்துள்ளோர் (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் பதிவு செய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு / அனுமதி பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர்) மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்பு / நேர்முகப்பரீட்சை நடைபெற்ற பின்பு மேற்படி நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டு அவற்றை இரத்துச் செய்திருப்பின் அனுமதிக்கு தகுதியற்றவராவர்,

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களுக்காக தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவ அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டவர்கள்,

8.6 திருமணம் முடித்துள்ள /விவாக ஒப்பந்தமொன்றில் இணைந்துள்ள / விவாகரத்து செய்த விண்ணப்பதாரிகள்.

9.0 **பாடநெறிக்கான நிபந்தனைகள் :**

9.1 பாடநெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருடங்கள் வதிவிடக் கற்கை பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்து ஒரு வருடகாலம் கட்டுறுப்பயில்வு மேற்கொள்ளல் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுனர்களின் வரவு 90% ஐ விட குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல மாணவ ஆசிரியர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் உள்ளக தொடர் மதிப்பீட்டிலும், உள்ளகப் பரீட்சைகளிலும் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழி பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டும்.

9.3 சகல மாணவ ஆசிரியர்களும் வதிவிடக் கற்கை பெறும் இரண்டு வருடங்களுக்கு ஒரு வருடத்திற்கு 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா5000/- பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். கட்டுறுப்பயில்வு காலத்தில் 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா5000/- வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகள் மாணவ ஆசிரியர்களே மேற்கொள்ள வேண்டும்.

9.4 தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூபா ஐந்து லட்சம் (ரூபா 500,000) பிணைமுறி மற்றும் உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட வேண்டும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களுக்குள் பாடநெறியை இடைநிறுத்துவாராயின் ஆசிரிய மாணவர்களுக்காக செலவிடப்பட்ட தொகையை மீளச் செலுத்திய பின்பு விலகிக் கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களின் பின்னர் பயிற்சியை இடைநிறுத்துவாராயின் இப்பிணைமுறி மற்றும் உடன்படிக்கையின்படி முழுத்தொகையையும் (ரூபா 500,000) அரசுக்கு செலுத்த வேண்டும். மேலும் விண்ணப்பதாரி யாதும் முறையான அறிவித்தலின்றி குறைந்தது ஒரு மாத காலத்திற்கு பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றாவிடின் அவர் பாடநெறியை விட்டுச்சென்றவராக கருதிப் பிணைமுறி மற்றும் உடன்படிக்கையின்படி முழுத்தொகையான ஐந்து லட்சம் (ரூபா 500,000) அரசுக்கு செலுத்திய பின்னர் பாடநெறியிலிருந்து விலக்கப்படுவார்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின் அரச பாடசாலைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் நியமனத்தை பெற்றுக்கொள்ளாவிடின், பிணைமுறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத்தொகையான ரூபா 500,000 ஐ அரசுக்கு செலுத்திய பின்னர் விலக்கப்படுவார். மேலும் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின் அரச பாடசாலை ஒன்றுக்கு வழங்கப்படுகின்ற ஆசிரியர் நியமனத்தினை பெற்றுக்கொண்டதன் பின்பு ஐந்து (05) வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர் சேவையாற்ற வேண்டிய ஐந்து வருடத்தில் எஞ்சிய காலங்களுக்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை செலுத்த வேண்டும்.

செலுத்தப்படவேண்டிய தொகையானது :

$$\frac{\text{ரூபா } 500{,}000}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$

எனக் கணக்கிடப்படும்.

9.4.1 விசேட மருத்துவ காரணங்களுக்காக பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பாடநெறியைவிட்டு விலகவேண்டியேற்படுமாயின் கீழ்க்காணும் ஆவணங்கள் சகிதம் நோயின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்படவேண்டும்.

- பிணியுற்ற நிலைமை காரணமாக சிகிச்சை பெறுவதற்கான ஏற்புடைய வைத்திய அறிக்கை.
- மேலும் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள உகந்த ஆரோக்கியமின்மை தொடர்பாக அரச மருத்துவரினால் உறுதிசெய்த கடிதம்.

உரிய ஆவணங்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தப்பட்டு, கல்வியியற் கல்லூரி முகாமைத்துவ குழுவினால் நோக்கப்பட்டு பரிந்துரைப்புகள் முன்வைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினதும் மற்றும் சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்படும் அரச வைத்தியசாலையின் வைத்தியர் அல்லது வைத்திய சபையினதும் சிபாரிசுகளைப் பெற்று அதற்காக கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளர் அனுமதி பெறப்பட்டு எவ்வித அறவிடலும் இன்றி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

9.4.2 சட்டப்படி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ளாமல் பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் அல்லது நிரந்தர ஆசிரிய நியமனம் பெறும் வரையான காலப்பகுதியில் வெளிநாடு செல்வதற்காக எந்தவொரு பயிலுனருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.5 பாடநெறியைத் தொடரும் பகுதியில் ஒழுக்காற்றுக் காரணமாகவோ அல்லது சேர்த்துக்கொள்வதன் பொருட்டு போலித் தகவல்கள் முன்வைத்ததன் அடிப்படையில் அல்லது 8.0 வது பகுதியில் குறிப்பிட்ட விண்ணப்பிப்பதற்கோ அல்லது சேர்க்கப்படுவதற்கு தகுதியற்றவர் என்றவாறு உரிய உண்மையான தகவல்களை மறைத்தவர் என்ற அடிப்படையில் பாடநெறியை விட்டு விலக்கும் போது பிணை முறியின் முழுப்பெறுமதி (ரூபா 500,000) அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9.6 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் ஆசிரிய மாணவர்களுக்கு பகுதி 8.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடநெறியைத் தொடர்வதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் ஆசிரிய மாணவர் ஒப்பமிடுகின்ற பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி (ரூபா. 500,000) மீளஅறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.

9.7 பாடநெறியைத் தொடரும் கால எல்லையில் மாணவ ஆசிரியர் திருமண உடன்படிக்கை செய்தல் / திருமணம் செய்தல் அல்லது பதிவுசெய்வதற்கு முன்னர் திருமணமானவர் / திருமண உடன்படிக்கை செய்தவர் என உறுதிசெய்யப்படின் மாணவத்துவம் இரத்துச் செய்யப்படும்.திருமணமானமை தெரிய வந்ததன் பின்னர் விவாகரத்து செய்திருந்தாலும் எக்காரணம் கொண்டும் மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

9.8 விசேட ஒதுக்கீட்டின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படும் குருமார்கள் பதிவு செய்ததன் பின்னர் பாடநெறிக்காலத்திலே சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொண்டாராயின் பிணை முறிக்கு அமைய முழுப் பெறுமதி (ரூபா 500,000) அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து விலக்கப்படுவார்கள். பயிற்சியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய மதகுருமார் /துறவிகள் தமது துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்றும் குறைந்தது 05 வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாகவும் கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும். யாதுமொரு காரணத்தால் உரிய ஐந்து (05) வருட பூர்த்திக்கு முன் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதாயின் எஞ்சிய காலத்துக்காக (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) பிணைமுறி உடன்படிக்கைக்கு உரிய தொகை கணக்கிடப்பட்டு, அந்த முழுத்தொகை அரசுக்கு செலுத்தப்பட வேண்டும்.

செலுத்தப்படவேண்டிய தொகையானது :

$$\frac{\text{ரூபா } 500{,}000}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$

என அமையும்.

**கவனத்திற் கொள்க :**

- இதன்போது தகுதிகாண் காலத்துக்குள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பின் உரிய தொகை அறவிடப்பட்டு சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

9.9 பாடநெறியைத் தொடரும் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகள், வரவு, ஆர்வம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத (இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்பட) ஆசிரிய மாணவர்கள் பாடநெறியைத் தொடர்வதிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் பாடநெறியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது திருப்திகரமான மட்டத்தை அடையத் தவறும் போது பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.10 பாடநெறியைத் தொடரும் கால எல்லைக்குள் ஆசிரிய மாணவர் உடல், உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது கட்டுறுப்பயில்வு கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதன் அறிக்கை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு / கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.11 பாடநெறியைத் தொடரும் காலத்தின் போது கல்வியியற் கல்லூரியின் ஒழுக்க விதிமுறைகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது உறுதிசெய்யப்படுமாயின் அது தொடர்பாக கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் விதப்புரைக்கு அமைய குறித்த காலப்பகுதியில் வகுப்புத்தடை செய்தல் / பாடநெறிக்காலத்தை நீடித்தல் /பாடநெறியிலிருந்து நீக்கப்படுதல் /பிறிதும் பொருத்தமான தண்டனைக்குட்படுத்தலுக்கான அதிகாரம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் /கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.12 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் ஆசிரிய மாணவர் யாதுமொரு பிற பாடநெறியை பின்பற்றுவதற்காக வாரநாட்கள் / வாரயிறுதி நாட்களில் நிறுவனத்தை விட்டு வெளியே செல்ல எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.13 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சகிதம் முதல் ஐந்து வருட காலம் ஆசிரிய சேவையில் இருக்கும் போது யாதும் காரணத்துக்காக சேவையிலிருந்து விலகுவதாயின் அல்லது வெளிநாடு செல்வதாயின் உரிய பிணைமுறி உடன்படிக்கைக்கு அமைய முழுத்தொகையான ஐந்து லட்சத்தில் (ரூபா 500,000) எஞ்சியிருக்கும் காலப்பகுதிக்காக அறவிடப்படவேண்டிய (மாதங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்டு) தொகை அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

செலுத்தப்படவேண்டிய தொகையானது :

$$\frac{\text{ரூபா } 500{,}000}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$

என அமையும்.

**கவனத்திற் கொள்க :**

- முதல் ஐந்து வருட காலப்பகுதிக்குள் 9.13 பகுதியில் குறிப்பிட்டவாறு சேவையிலிருந்து விலகினால் மீண்டும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரியாக ஆசிரிய தொழிலில் நுழைவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படமாட்டாது.
- 9.13 பகுதிக்கு அமைய உரிய நியமனம் பெற்றுக்கொண்டபின் தகுதிகாண் காலத்துக்குள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும்போது உடன்படிக்கை மற்றும் பிணைமுறிக்கு மேலதிகமாக தாபனக்கோவை சட்டதிட்டங்களும் விதிமுறைகளும் செல்லுபடியாகும்.
- தகுதிகாண் காலம் பூர்த்தியடைந்ததன் பின் வெளிநாடு செல்ல உத்தேசிப்பின் பகுதி 9.13 குறிப்பிட்டவாறாக எஞ்சிய தொகை அரசுக்கு செலுத்தி பொதுவான அரச ஊழியர்களுக்குரிய சலுகைகளை பெற்று வெளிநாடு செல்லலாம்.

9.14 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் ஆசிரிய மாணவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்கவேண்டிய இணைப்பாட விதானச் செயற்பாடுகள் உட்பட) பாடநெறி தொடரும் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் இம்மதிப்பீடு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டுப் பிரிவாகும்.

9.15 இப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இவர்கள் மாவட்ட அடிப்படையில் /மாகாண அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் அமர்த்தப்படும் போது மாவட்டத்தில் /மாகாணத்தில் வெற்றிடம் இல்லாவிடின் நாட்டின் ஏதாவது ஒரு பிரதேசத்தில் சேவைபுரிவதற்கு இணங்க வேண்டும். சேவைக்கமர்த்தப்படுதல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.15.1 பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவதற்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவாராயின் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படும் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும்.

9.15.2 மேற்கூறப்பட்ட நிபந்தனையின் கீழ் பாடநெறியைத் தொடரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகத் தாம் பயிலும் பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மேலும் ஆசிரியர் கல்வி

டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த பின் மாவட்ட அடிப்படையில் /மாகாண அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளும் முதல் நியமனம் பெறும் மாவட்டத்தில் / மாகாணத்தில் குறைந்தபட்சம் நியமனத் திகதி தொடக்கம் ஐந்து வருடங்கள் (05) கல்வி அமைச்சின் கீழ் சேவையாற்றுவதாக கல்வி அமைச்சின் செயலாளருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். இவ் ஐந்து வருடங்களில் (05) நியமனம் வழங்கப்படும் மாவட்டம் /மாகாணம் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்பட இடமளிக்கப்படமாட்டாது.

9.16 கல்வி அமைச்சினால் பாடநெறிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற தேசிய கல்வியியற் கல்லூரியை, வைத்திய /தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு ஆசிரிய மாணவர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெறமாட்டார்.

9.17 சேர்த்துக்கொள்ளும் செயன்முறை நடைமுறைப்படுத்தப்படும் போது அது தெரடர்பான உரிய அலுவலர்களுக்கு விண்ணப்பதாரியினால் அல்லது அவர் தொடர்புடைய பிற நபர்களால் முறையற்ற செல்வாக்குகள் செலுத்தப்பட்டால் அவர் சேர்த்துக்கொள்ளும் தகைமை இல்லாதவராக கருதப்படுவார்.

9.18 சகல கல்வி மற்றும் ஏனைய தகைமைகளும் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு (2017.11.24) அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

10.0 **விண்ணப்பித்தல் :**

**"விண்ணப்பத்தை தயாரிப்பது சம்பந்தமாக அறிவுறுத்தலின்" கீழ் 7.0 மற்றும் 7.1 பகுதியில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் மாவட்ட மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக மிகவும் தெளிவாக விளங்கிக்கொண்டு அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்"**

10.1 விண்ணப்பதாரர் ஒருவர் உயர்ந்தபட்சம் மூன்று (03) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிகள் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது இரண்டு (02) பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்களுக்கு மற்றுமொரு பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு சமய மதகுருமார் தமது சமயத்திற்கு பொருத்தமான பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**உ-ம் :** விஞ்ஞானப் பாடநெறிக்கு சிங்கள மொழிமூலம் மற்றும் ஆங்கில மொழிமூலம் ஆகிய இரண்டு மொழிமூலமும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இரண்டு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாகக் கருதப்படுவர். எனவே மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

10.2 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தினை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்குமேற்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்திருப்பின் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10.3 புத்தசமயம்,இந்து சமயம்,இஸ்லாம்சமயம்,ரோமன் கத்தோலிக்கசமயம்/கிறிஸ்தவசமயம்,உடற்கல்வி,மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் மட்டும் ஒரு விண்ணப்பப்படிவத்துடன் அதில் உறுதி செய்யப்பட்ட இரண்டு (02) நிழற் பிரதிகளை மாத்திரம் ஒரு கடிதவுறையிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

10.4 விண்ணப்பப்படிவம் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கவேண்டும்.

10.5 விண்ணப்பப்படிவம் 2017.11.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), தேசிய கல்வியியற் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

கீழ்வரும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடிதவுறையை தயாரிக்கவும்.

<table>
<tr><td colspan="2">2017 ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்<br><br>முதலாவது விருப்பத்தைக் குறித்துக் காட்டும் பாடநெறியின் இலக்கம் ........மொழிமூலம் ..........</td></tr>
<tr><td></td><td>பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி),<br>தேசிய கல்வியியற் கல்லூரிக் கிளை,<br>கல்வி அமைச்சு,<br>இசுருபாய,<br>பத்தரமுல்லை.</td></tr>
</table>

(இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அல்லது தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பக்கூடாதென்பதை கவனத்திற் கொள்ளவும்)

10.6 <u>சகல விண்ணப்பதாரிகளும் தாம் அனுப்பிய விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றை கட்டாயம் தம்மிடம் வைத்திருக்க வேண்டும்</u>. தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக நேர்முகப்பரீட்சையின்போது போட்டோ பிரதியை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதோடு, சேர்த்துக்கொள்ளல் தொடர்பான விளக்கங்கள் அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய **பதிவுத் தபால் பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும்**.

10.7 **பரீட்சை இலக்கம், வருடம், பாடநெறி இலக்கம் மற்றும் பாடநெறியின் பெயர் போன்றவற்றை சரியாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.**

10.8 ஏதாவதொரு பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமை இல்லாமல் விண்ணப்பித்த பின்னர், அதனால் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் வசதியீனம் தொடர்பில் கல்வி அமைச்சு பொறுப்பேற்கமாட்டாது.

10.9 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவோ /நிராகரிக்கப்பட்டதாகவோ அறிவிக்கப்படமாட்டாது. அதேபோல் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் பட்சத்திலோ நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படும் பட்சத்திலோ தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டதாக கருத முடியாது. மேலும் மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தேவைக்கு ஏற்பவே சேர்த்துக்கொள்ளப்படுவர். இது தொடர்பான சகல முடிவும் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும்.

10.10 விசேடமாக சொல்லியிருக்காத சந்தர்ப்பம் தவிர விண்ணப்பப்படிவத்தோடு வேறெந்தவொரு ஆவணத்தையும் இணைத்து அனுப்பக்கூடாது.

10.11 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ் போலியானது அல்லது மோசடி செய்யப்பட்ட சான்றிதழ் என பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரி பாடநெறியிலிருந்து /சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அரச சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவார்.

11.0 வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் /கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12.0 இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கிலமொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவதொரு தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாகும்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.
2017, ஒற்றோபர் 17.

7.0. 2017 ஆம் ஆண்டுக்காக தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாவட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை

7.0.1. சிங்கள மொழிமூலம்

| மாகாணம் | மாவட்ட இலக்கம் | பாடநெறி / மாவட்டம் | ஆரம்பக்கல்வி | விஞ்ஞானம் | கணிதம் | சமூக விஞ்ஞானம் | பௌத்த சமயம் | றோமன் கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | முதலாம் மொழி (சிங்களம்) | சித்திரம் | நடனம் (கீழைத்தேயம்) | சங்கீதம் (கீழைத்தேயம்) | நாடகமும் அரங்கியலும் | உடற்கல்வி | மனைப் பொருளியல் | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | தொழில்நுட்பக் கல்வி - கலையும் கைப்பணியும் | வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்: வடிவமைப்பும் கட்டிடத்தொழில் நுட்பமும் | வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்: வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் | வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்: வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில் நுட்பமும் | இரண்டாம் மொழி (சிங்களம்) | விசேட கல்வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1 | கொழும்பு | 73 | 7 | 5 | 2 | 6 | 3 | 6 | 2 | 3 | 2 | 3 | 12 | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 8 | 4 |
| | 2 | கம்பஹா | 63 | 6 | 7 | 2 | 9 | 3 | 7 | 2 | 3 | 6 | 5 | 12 | 3 | 4 | 1 | 1 | 1 | 1 | 15 | 6 |
| | 3 | களுத்துறை | 35 | 5 | 2 | 2 | 5 | 2 | 4 | 3 | 2 | 2 | 2 | 9 | 5 | 3 | 0 | 1 | 1 | 1 | 6 | 4 |
| மத்திய | 4 | கண்டி | 35 | 7 | 6 | 2 | 7 | 2 | 7 | 4 | 3 | 3 | 2 | 10 | 3 | 7 | 1 | 0 | 1 | 1 | 8 | 3 |
| | 5 | மாத்தளை | 20 | 4 | 2 | 1 | 5 | 1 | 3 | 3 | 1 | 1 | 2 | 6 | 2 | 3 | 1 | 1 | 0 | 1 | 6 | 3 |
| | 6 | நுவரெலியா | 77 | 1 | 3 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 6 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 5 | 2 |
| தென் | 7 | காலி | 54 | 8 | 7 | 2 | 6 | 2 | 5 | 3 | 4 | 2 | 2 | 9 | 4 | 4 | 1 | 1 | 1 | 1 | 9 | 3 |
| | 8 | அம்பாந்தோட்டை | 63 | 9 | 9 | 1 | 4 | 1 | 4 | 4 | 2 | 2 | 1 | 10 | 4 | 4 | 1 | 1 | 1 | 1 | 9 | 3 |
| | 9 | மாத்தறை | 42 | 6 | 8 | 1 | 4 | 1 | 4 | 3 | 4 | 2 | 3 | 8 | 3 | 8 | 0 | 0 | 0 | 0 | 4 | 3 |
| வட | 10 | யாழ்ப்பாணம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 11 | கிளிநொச்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | 12 | மன்னார் | 11 | 0 | 0 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 |
| | 13 | முல்லைத்தீவு | 18 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 3 | 1 |
| | 14 | வவுனியா | 19 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 |
| கிழக்கு | 15 | அம்பாறை | 45 | 1 | 3 | 1 | 4 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 6 | 1 |
| | 16 | மட்டக்களப்பு | 23 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 |
| | 17 | திருகோணமலை | 43 | 1 | 3 | 1 | 2 | 1 | 1 | 0 | 2 | 1 | 0 | 5 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 5 | 1 |
| வடமேல் | 18 | குருநாகல் | 72 | 12 | 5 | 2 | 9 | 2 | 9 | 5 | 3 | 2 | 3 | 12 | 6 | 8 | 1 | 1 | 1 | 1 | 10 | 6 |
| | 19 | புத்தளம் | 65 | 10 | 5 | 2 | 4 | 4 | 4 | 2 | 4 | 1 | 2 | 9 | 4 | 3 | 1 | 1 | 1 | 1 | 10 | 3 |
| வடமத்தி | 20 | அநுராதபுரம் | 122 | 11 | 10 | 1 | 6 | 2 | 6 | 3 | 2 | 2 | 2 | 10 | 3 | 3 | 1 | 1 | 1 | 1 | 8 | 5 |
| | 21 | பொலன்னறுவை | 38 | 6 | 5 | 1 | 5 | 1 | 3 | 2 | 3 | 1 | 2 | 8 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 |
| ஊவா | 22 | பதுளை | 46 | 19 | 6 | 1 | 9 | 1 | 5 | 2 | 1 | 2 | 2 | 7 | 3 | 3 | 1 | 1 | 1 | 1 | 6 | 3 |
| | 23 | மொனராகலை | 47 | 10 | 6 | 1 | 4 | 1 | 4 | 2 | 1 | 2 | 1 | 7 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 9 | 3 |
| சப்ரகமுவ | 24 | கேகாலை | 56 | 5 | 6 | 1 | 7 | 2 | 4 | 3 | 2 | 2 | 1 | 9 | 3 | 4 | 1 | 1 | 1 | 1 | 8 | 3 |
| | 25 | இரத்தினபுரி | 58 | 20 | 20 | 2 | 10 | 1 | 7 | 5 | 1 | 2 | 3 | 13 | 3 | 4 | 1 | 1 | 1 | 1 | 6 | 4 |
| மொத்த எண்ணிக்கை | | | 1125 | 150 | 120 | 30 | 110 | 35 | 90 | 50 | 45 | 40 | 40 | 170 | 60 | 70 | 15 | 15 | 15 | 15 | 150 | 65 |

## 7.0. 2017 ஆம் ஆண்டுக்காக தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாவட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை

### 7.0.2. தமிழ் மொழி மூலம்

| மாகாணம் | மாவட்ட இலக்கம் | பாடநெறி / மாவட்டம் | ஆரம்பக் கல்வி | விஞ் ஞானம் | கணிதம் | சமூக விஞ்ஞானம் | இந்து சமயம் | றோமன் கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | இஸ்லாம் | முதலாம் மொழி (தமிழ்) | சித்திரம் | சங்கீதம் (கர்நாடகம்) | நடனம் (பாரதம்) | நாடகமும் அரங்கியலும் | உடற்கல்வி | மனைப் பொருளியல் | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பவியல் | தொழில்நுட்பக் கல்வி - கலையும் கைப்பணியும் | வடிவமைப்பும் தொழில்நுட்பமும்: வடிவமைப்பும் கட்டிடத்தொழில் நுட்பமும் | வடிவமைப்பும் தொழில்நுட்பமும்: வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் | வடிவமைப்பும் தொழில்நுட்பமும்: வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில் நுட்பமும் | இரண்டாம் மொழி (தமிழ்) | விசேட கல்வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1 | கொழும்பு | 6 | 5 | 4 | 0 | 1 | 1 | 1 | 2 | 1 | 0 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 3 | 1 |
| | 2 | கம்பஹா | 6 | 4 | 4 | 0 | 0 | 0 | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 4 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 |
| | 3 | களுத்துறை | 12 | 8 | 4 | 1 | 0 | 1 | 1 | 5 | 1 | 1 | 0 | 0 | 2 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 4 | 1 |
| மத்திய | 4 | கண்டி | 18 | 8 | 8 | 0 | 1 | 1 | 2 | 6 | 1 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 5 | 1 |
| | 5 | மாத்தளை | 14 | 6 | 6 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | 0 | 1 | 2 | 2 | 0 | 0 | 1 | 1 | 1 | 4 | 1 |
| | 6 | நுவரெலியா | 6 | 7 | 4 | 1 | 1 | 1 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 1 | 0 | 1 | 1 | 1 | 4 | 1 |
| தென் | 7 | காலி | 4 | 2 | 1 | 0 | 1 | 0 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 7 | 1 |
| | 8 | அம்பாந்தோட்டை | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 8 | 1 |
| | 9 | மாத்தறை | 9 | 2 | 1 | 0 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | 1 |
| வட | 10 | யாழ்ப்பாணம் | 24 | 14 | 8 | 3 | 5 | 4 | 1 | 8 | 3 | 2 | 2 | 2 | 6 | 8 | 5 | 2 | 1 | 1 | 1 | 3 | 2 |
| | 11 | கிளிநொச்சி | 8 | 9 | 4 | 2 | 2 | 2 | 1 | 5 | 1 | 1 | 1 | 1 | 5 | 4 | 3 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 |
| | 12 | மன்னார் | 13 | 8 | 4 | 1 | 1 | 3 | 2 | 3 | 1 | 1 | 1 | 1 | 4 | 4 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 |
| | 13 | முல்லைத்தீவு | 10 | 9 | 4 | 2 | 1 | 2 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 4 | 3 | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 |
| | 14 | வவுனியா | 4 | 9 | 5 | 1 | 2 | 1 | 1 | 4 | 1 | 1 | 1 | 1 | 4 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 |
| கிழக்கு | 15 | அம்பாறை | 15 | 8 | 7 | 1 | 1 | 2 | 2 | 5 | 2 | 1 | 1 | 1 | 4 | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 |
| | 16 | மட்டக்களப்பு | 21 | 9 | 7 | 1 | 2 | 1 | 1 | 5 | 3 | 1 | 1 | 1 | 4 | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 |
| | 17 | திருகோணமலை | 25 | 9 | 6 | 1 | 2 | 2 | 2 | 5 | 2 | 1 | 1 | 1 | 5 | 3 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 |
| வடமேல் | 18 | குருநாகல் | 27 | 15 | 8 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 0 | 0 | 0 | 3 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 6 | 1 |
| | 19 | புத்தளம் | 9 | 8 | 2 | 1 | 1 | 2 | 2 | 3 | 2 | 0 | 0 | 0 | 2 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 6 | 1 |
| வடமத்தி | 20 | அநுராதபுரம் | 6 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 |
| | 21 | பொலன்னறுவை | 3 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 |
| ஊவா | 22 | பதுளை | 12 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 5 | 2 | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 2 | 1 |
| | 23 | மொனராகலை | 6 | 4 | 1 | 0 | 1 | 0 | 1 | 4 | 1 | 1 | 1 | 0 | 3 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 2 | 1 |
| சப்ரகமுவ | 24 | கேகாலை | 18 | 10 | 8 | 1 | 2 | 1 | 2 | 5 | 2 | 1 | 1 | 1 | 4 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 |
| | 25 | இரத்தினபுரி | 8 | 2 | 9 | 1 | 2 | 1 | 1 | 6 | 2 | 0 | 1 | 1 | 5 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 |
| மொத்த எண்ணிக்கை | | | 285 | 161 | 110 | 20 | 30 | 30 | 30 | 90 | 30 | 15 | 15 | 15 | 80 | 50 | 30 | 15 | 15 | 15 | 15 | 90 | 30 |

7.0. 2017 ஆம் ஆண்டுக்காக தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாவட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை

7.0.3. ஆங்கில மொழிமூலம்

| மாகாணம் | மாவட்ட இலக்கம் | பாடநெறி / மாவட்டம் | ஆங்கிலம் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் | கணிதம் | மேற்கத்தேய சங்கீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 1 | கொழும்பு | 22 | 16 | 5 | 5 | 1 |
| | 2 | கம்பஹா | 26 | 11 | 3 | 5 | 1 |
| | 3 | களுத்துறை | 26 | 11 | 3 | 3 | 0 |
| மத்திய | 4 | கண்டி | 19 | 9 | 4 | 5 | 1 |
| | 5 | மாத்தளை | 12 | 8 | 3 | 3 | 1 |
| | 6 | நுவரெலியா | 35 | 5 | 3 | 2 | 0 |
| தென் | 7 | காலி | 26 | 9 | 3 | 5 | 1 |
| | 8 | அம்பாந்தோட்டை | 36 | 8 | 3 | 3 | 0 |
| | 9 | மாத்தறை | 19 | 11 | 5 | 5 | 1 |
| வட | 10 | யாழ்ப்பாணம் | 26 | 11 | 5 | 4 | 1 |
| | 11 | கிளிநொச்சி | 14 | 9 | 2 | 2 | 0 |
| | 12 | மன்னார் | 13 | 8 | 1 | 2 | 0 |
| | 13 | முல்லைத்தீவு | 12 | 6 | 2 | 2 | 0 |
| | 14 | வவுனியா | 11 | 7 | 2 | 2 | 0 |
| கிழக்கு | 15 | அம்பாறை | 17 | 8 | 2 | 2 | 0 |
| | 16 | மட்டக்களப்பு | 16 | 6 | 2 | 2 | 0 |
| | 17 | திருகோணமலை | 15 | 6 | 3 | 3 | 1 |
| வடமேல் | 18 | குருநாகல் | 23 | 16 | 6 | 4 | 1 |
| | 19 | புத்தளம் | 23 | 12 | 3 | 3 | 0 |
| வடமத்தி | 20 | அநுராதபுரம் | 15 | 11 | 4 | 3 | 1 |
| | 21 | பொலன்னறுவை | 14 | 8 | 3 | 2 | 1 |
| ஊவா | 22 | பதுளை | 18 | 8 | 3 | 2 | 1 |
| | 23 | மொனராகலை | 16 | 8 | 3 | 2 | 1 |
| சப்ரகமுவ | 24 | கேகாலை | 27 | 10 | 3 | 4 | 1 |
| | 25 | இரத்தினபுரி | 19 | 8 | 4 | 5 | 1 |
| மொத்த எண்ணிக்கை | | | 500 | 230 | 80 | 80 | 15 |

7.1. 2017 ஆம் ஆண்டுக்காக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாவட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை

| மாகாணம் | மாவட்ட இலக்கம் | பாடநெறி / மாவட்டம் | 7.1.1. சிங்கள மொழிமூலம் | | | | 7.1.2. தமிழ் மொழிமூலம் | | | | | | | | 7.1.3. ஆங்கில மொழிமூலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பக்கல்வி | விஞ்ஞானம் | கணிதம் | சமூக விஞ்ஞானம் | ஆரம்பக்கல்வி | விஞ்ஞானம் | கணிதம் | சமூக விஞ்ஞானம் | முதலாம் மொழி (தமிழ்) | சித்திரம் | சங்கீதம் (கர்நாடகம்) | நடனம் (பரதம்) | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| மேல் | 1 | கொழும்பு | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| | 3 | களுத்துறை | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 2 |
| மத்திய | 4 | கண்டி | 1 | 2 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 3 | 2 | 1 | 1 | 2 |
| | 5 | மாத்தளை | 1 | 1 | 1 | 1 | 3 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | |
| | 6 | நுவரெலியா | 2 | 2 | 2 | 1 | 5 | 2 | 2 | 2 | 5 | 3 | 2 | 2 | 2 |
| தென் | 7 | காலி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 |
| | 9 | மாத்தறை | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 |
| வடமேல் | 18 | குருநாகல் | 1 | 1 | 1 | 1 | 3 | 2 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 3 |
| ஊவா | 22 | பதுளை | 2 | 1 | 2 | 2 | 5 | 3 | 3 | 2 | 4 | 3 | 2 | 2 | 3 |
| | 23 | மொனராகலை | 1 | 2 | 2 | 2 | 6 | 2 | 2 | 1 | 4 | 2 | 2 | 1 | 1 |
| சப்ரகமுவ | 24 | கேகாலை | 1 | 1 | 1 | 1 | 4 | 3 | 2 | 1 | 3 | 1 | 1 | 1 | 2 |
| | 25 | இரத்தினபுரி | 2 | 2 | 2 | 2 | 5 | 2 | 3 | 2 | 4 | 2 | 1 | 2 | 1 |
| மொத்த எண்ணிக்கை | | | 15 | 15 | 15 | 15 | 40 | 20 | 20 | 15 | 35 | 20 | 15 | 15 | 20 |

**விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்**

1.0 வர்த்தமானி அறிவித்தலை பல தடவைகள் கவனமாக வாசிக்கவும். தங்கள் தகைமைக்கேற்ற மூன்று (03) பாடநெறிகளுக்கு ஒரு விண்ணப்பப்படிவம் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

புத்தசமயம், இந்துசமயம், இஸ்லாம் சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம், உடற்கல்வி, மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டும் தமது விண்ணப்பப்படிவத்துடன் உறுதி செய்யப்பட்ட அதன் போட்டோப் பிரதிகள் இரண்டை (02) **மாத்திரம்** ஒரு கடிதவுறையிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும். (பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் சமாதான நீதவான் ஊடாகவும் இரண்டு போட்டோப் பிரதிகளையும் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.)

2.0 **கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய (Legal) F5 அளவில் (சென்ரிமீற்றர் 21.8 x சென்ரி மீற்றர் 34) வெள்ளைநிறக் கடதாசியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும்**. கூட்டினுள் தகவல்களைக் குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிய கூட்டினுள் "X" இடுக.

3.0 விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்காக ஒவ்வொரு பாடநெறிக்காகவும் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும் கணணிப் பெயர்ப்பட்டியலை முதற்பக்கத்தில் 1.0 – 11.0 வரையான தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்படும். விசேடமாக பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், 6.2.1 இன்படி மாவட்டம், க.பொ.த (உ.த) பரீட்சை இலக்கம், "Z" பெறுமதியை சரியானது என உறுதிசெய்யவும். ஓர் இலக்கத்திற்கு மேலால் வேறு இலக்கத்தை எழுதுதல் அல்லது தெளிவற்ற விதத்தில் எழுதுதல் உள்ளிட்ட பிழையாக எழுதப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் தயவுடன் கருத்திற்கொள்ளவும்.

4.0 உடற்கல்வி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 13.0 வாசகத்திலும், புத்த சமயப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் 14.0 வாசகத்திலும் கத்தோலிக்க/ கிறிஸ்தவ சமயப் பாடநெறிக்கான விண்ணப்பப் படிவத்தின் 15.0 வாசகத்திலும், இந்து சமயம்/ இஸ்லாம் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 16.0 வாசகத்திலும், மேற்கத்தேய சங்கீதத்திற்காக 17.0 வாசகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கருத்திற் கொள்ளப்படும். இதனால் அவற்றை சரியாக நிரப்ப வேண்டும். அவற்றைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

5.0 6.2.1 பந்திக்கமைய மாவட்டப் பிரிவின் இலக்கங்கள்

| மாவட்டம் | அதன் இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரேலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |

| மாவட்டம் | அதன் இலக்கம் |
|---|---|
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

6.0 மொழிக்காக உரிய குறியீட்டைக் குறிப்பிடுக:

சிங்களம் - S  தமிழ் - T  ஆங்கிலம் - E

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2017**

(வர்த்தமானி அறிவித்தலின் 10.2 இற்கமைய விண்ணப்பதாரர் தமது விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். 1.0 – 11.0 வரையான தகவல்களின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்காக தேர்ந்தெடுப்பதற்கான கணணிப் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்படும்.)

1.0

| விருப்புத் தொடர் | பாடநெறியின் இலக்கம் | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் மொழி மூலம் (S/T/E) |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

1.0 அட்டவணையில் தங்களால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை ஒரு போதும் திருத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

2.0

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ஆங்கிலத்தில் (In Block Letters) உ-ம்: Mr.PERERA R.C.

Rev./Mr./Miss.: - ..............................................................................................

2.2 முழுப்பெயர் ஆங்கிலத்தில் (In Block Letters) :- ..............................................................................

..............................................................................................................................

3.0 நிரந்தர வதிவிட முகவரி : ஆங்கிலத்தில் (In Block Letters) :- ..................................................................

..............................................................................................................................

தொலைபேசி இல. : ........................................................

4.0 வர்த்தமானி அறிவித்தலில் 6.2.1. பந்திக்கமைய நிரந்தர வதிவிட மாவட்டம் :

................................ மாவட்ட இலக்கம் : ☐☐

5.0 5.1 பிறந்ததிகதி: வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

1.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 பால் : ஆண் / பெண் : ஆண் [1] பெண் [2]

7.0 இன வகை :

சிங்களவர் [1] இலங்கைத் தமிழர் [2] இந்திய வம்சாவளி தமிழர் [3] முஸ்லிம் [4] ஏனையவை [5]

8.0 2015 ஆம் ஆண்டின் க.பொ.த (உ.த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

8.1 பரீட்சையில் தோற்றிய பாடத்துறைப் பிரிவு :
பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்/ வணிகக் கல்வி/ கலை/ தொழில்நுட்பம்/ வேறு

8.2 பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் : ............

8.3 பரீட்சை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐ பரீட்சைக்குத் தோற்றிய தடவை : ..........

8.4 Z புள்ளி: [+] [-] ☐ • ☐☐☐☐

(உரியதல்லாத குறியீட்டை வெட்டிவிடவும் )

8.5 பெறுபேற்று விபரம் பாடங்களுக்கமைய :

| பாடம் | பாட இலக்கம் | பெற்றதரம் |
|---|---|---|
| 1. ............................................ | ............... | ...................... |
| 2. ............................................ | ............... | ...................... |
| 3. ............................................ | ............... | ...................... |

9. சித்தியடைந்த க.பொ.த. (சா.த.) தரம் பற்றிய விபரம் :

| 9.1 | பரீட்சைக்கு தோற்றிய தடவை | முதலாம் தடவை | இரண்டாம் தடவை | மூன்றாம் தடவை |
|---|---|---|---|---|
| 9.2 | வருடம் | | | |
| 9.3 | பரீட்சை இலக்கம் | | | |
| 9.4 | பரீட்சை நிலைய இலக்கம் | | | |
| 9.5 | சித்தியடைந்த பாடங்களும் தரமும் | | | |
| | புத்தசமயம்/இந்து சமயம்/இஸ்லாம் சமயம்/ரோமன் கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம் | | | |
| | சிங்களம்/தமிழ் மொழி | | | |
| | ஆங்கிலம் | | | |
| | கணிதம் | | | |

| 9.1 | பரீட்சைக்கு தோற்றிய தடவை | முதலாம் தடவை | இரண்டாம் தடவை | மூன்றாம் தடவை |
|---|---|---|---|---|
| | வரலாறு | | | |
| | விஞ்ஞானம் | | | |
| I, II, III ஆம் தொகுதிப் பாடங்கள் | | | | |
| | I | | | |
| | II | | | |
| | III | | | |

10.0 10.1 நீங்கள் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றீர்களா?

ஆம் [1] இல்லை [2]

10.2 அப்படியானால் தோட்டத் தொழிலாளரின் பிள்ளையா இல்லையா என்பது குறித்து : (உரிய கூட்டில் x அடையாளமிடுக)

ஆம் [1] இல்லை [2]

11.0 உடற்கல்வி சிங்களம்/தமிழ் /ஆங்கிலம் மொழிமூல விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தில் வாசகம் 13.0 படி உள்ளிடும் புள்ளிகளின் கூட்டுத்தொகை [ ]

12.0 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் க.பொ.த (உ.த) பரீட்சைக்கு தோற்றியிருப்பின் தாங்கள் தோற்றியது ஒரு பாடத்திற்காயினும் ஒவ்வொரு தடவைகளினதும் முழுமையான விபரங்களைக் குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| 12.1 | பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | 1 | 2 |
| 12.2 | ஆண்டு : | ...................... | ...................... |
| 12.3 | பரீட்சை இலக்கம் : | ...................... | ...................... |
| 12.4 | Z புள்ளிகள் : | ...................... | ...................... |

12.5 சித்தி எய்திய பாடம் மற்றும் தரம் :

| (1 ஆம் அமர்வு) | | (2 ஆம் அமர்வு) | |
|---|---|---|---|
| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| ............................ | ................ | ............................ | ................ |
| ............................ | ................ | ............................ | ................ |
| ............................ | ................ | ............................ | ................ |

13.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.20 வாசகத்தின் 4.20.3 மற்றும் 4.20.4 பிரிவுக்கமைய விளையாட்டுத் திறமை தொடர்பான விபரங்கள்:

(உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் நிரப்ப வேண்டும்)

இப்பிரிவைப் பூரணப்படுத்தும் போது 4.20.3 இல் உள்ள சகல பிரிவுகள் தொடர்பாகவும் தாங்கள் கவனத்தை செலுத்தவேண்டும். தாங்கள் பெற்றுள்ள விளையாட்டுச் சான்றிதழ்கள்/திறமைகள் மூன்றின் தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும். தாங்கள் க.பொ.த (சா.த.) பரீட்சையில் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்றிருப்பின் 4.20.4 இற்கமைய உரிய தரத்திற்குரிய புள்ளியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் முதலாவது பக்கத்தில் 11.0 இல் உள்ளடக்கப்படல் வேண்டும்.

| தொ. இல. | ஆண்டு | வழங்கிய அமைச்சு/ நிறுவகம்/கழகம் | போட்டியை பிரதிநிதித்துவப்படுத்திய மட்டம் (சர்வதேசம்/ தேசிய/ மாகாண/மாவட்ட/வலயம்) | நிகழ்ச்சி/ போட்டி | பெற்ற இடம் | 4.20.3 இற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| க.பொ.த. (சா.த.) சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குப் பெற்ற தரம் | | | 4.20.4 இன் படி உரிய புள்ளிகள் | | | |
| மொத்தப் புள்ளி (11.0 இல் குறிப்பிடுக) | | | | | | |

14.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.5 பிரிவின் (அ) இற்கமைய பிராச்சீன பிராரம்பம், பௌத்த தர்மாச்சாரிய, பிரிவெனா இறுதிப் பரீட்சையின் மற்றும் அறநெறிப் பாடசாலையின் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் இங்கே உள்ளடக்கவும்.

| பரீட்சை | பிராச்சீன பிராரம்பம் | பௌத்த தர்மாச்சாரிய | பிரிவெனா இறுதி | அறநெறிப் பாடசாலை இறுதி |
|---|---|---|---|---|
| 14.1 ஆண்டு | | | | |
| 14.2 பரீட்சை இல. | | | | |
| 14.3 பரீட்சை நிலைய இல. | | | | |
| 14.4 பாடமும் தரமும் | 1.<br>2.<br>3.<br>4. | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6. | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9.<br>10.<br>11. | 1.<br>2.<br>3.<br>4. |

15.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.8 வாசகத்திற்கமைய கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களினால் உரிய பகுதி பூரணப்படுத்த வேண்டும்.

| பாடநெறியின்பெயர்/தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | பெற்றசித்தி |
| 15.1 தேவதர்ம சாஸ்திரம் (BTH). | | | |
| 15.2 தேசிய குருத்துவக் கல்லூரியின் கிறிஸ்தவ மெய்யியல் பாடநெறி சான்றிதழ். | | | |
| 15.3 தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்படும் கத்தோலிக்க சமய ஆசிரிய சான்றிதழ். | | | |
| 15.4 இறையியல் கல்லூரி நடாத்தும் கத்தோலிக்க சமயம் தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ். | | | |
| 15.5 துறவியாவதற்கான சமயக் கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறியை (Novitiate) வெற்றிகரமாகத் தொடர்ந்து பூர்த்தி செய்தமைக்கான துறவற சபைத் தலைவரினால் அல்லது உரிய மறை மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ். | | | |
| 15.6 தேசிய கிறிஸ்தவ சபையினால் (NCC) சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (கிறிஸ்தவ சமய ஆசிரியர்) பெற்றிருத்தல். | | | |
| 15.7 பிலிமத்தலாவை இலங்கை மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மறையியல் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தல். | | | |
| 15.8 கத்தோலிக்க/கிறிஸ்தவ ஆசிரியராக பதவியிலமர்த்த பொருத்தமானவர் என கத்தோலிக்கர்களுக்கான ஆயரின் சான்றிதழ் / கிறிஸ்தவர் களுக்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ். | | | |
| 15.9.க.பொ.த. (உ.த.) கிறிஸ்தவ திருமறை/கிறிஸ்தவம் / கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்திபெற்றிருத்தல். | | | |

16.0 வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள 4.6/4.7இக்கு இணங்க இந்துசமயம்/ இஸ்லாம் ஆகிய பாடநெறிக்கான விண்ணப்பதாரிகள் கீழ்க் குறித்த தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

| பாடநெறியின் பெயர் | காலப் பகுதி | சான்றிதழ் செல்லபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

17.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.18.1 மற்றும் 4.18.2 பகுதிக்கு அமைய மேலைத்தேய சங்கீதப் பாடநெறிக்கு விண்ணப்பித்தவர் மேலைத்தேய சங்கீதம் தொடர்பாக தேர்ச்சிக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

| வருடம் | சான்றிதழ் வழங்கிய நிறுவனம் | தேர்ச்சி/சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

*18.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :*

(i) *வர்த்தமானி அறிவித்தலின் 10.0 பகுதியில் குறிப்பிட்டமைக்கு ஏற்புடையதாக என்னால் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுகிறது என்பதை நான் அறிவேன்.*

(ii) *நான் விண்ணப்பித்துள்ள பாடநெறிகளுக்காக வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.*

(iii) *என்னால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என உறுதிசெய்கின்றேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதோ அல்லது வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணானது எனவோ தெரியவரும் பட்சத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட தகைமையற்றவர் என்றும் தேர்ந்தெடுத்ததன் பின்னர் பிழையான தகவல்கள் என தெரியவரும் பட்சத்திலோ அல்லது வர்த்தமானி அறிவித்தலுக்கு முரண்பட்டதாகவோ இருப்பின் எனது தெரிவை இரத்துச் செய்யமுடியும் என்பதனையும் நான் அறிந்துள்ளேன்.*

(iv) *நான் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கவில்லை என்றும், பல்கலைக்கழகத்தில்/பல்கலைக்கழக கல்லூரி/ ஏனைய உயர்கல்வி நிறுவகத்தில் பதிவு செய்யவில்லை என்றும்/மேலுள்ள நிறுவகங்களில் இற்றை வரைக்கும் எந்த பாடநெறியையும் தொடரவில்லை என்றும் வர்த்தமானி அறிவுறுத்தல் 8.4 பந்தியில் குறிப்பிட்டதற்கமைய பிழையான தகவல்கள் என தெரியவரும் பட்சத்தில் எனது தெரிவை இரத்துச் செய்ய முடியும் என்பதனையும் நான் அறிந்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.*

(v) *கல்வியியற் கல்லூரிகளின் ஒழுக்கவிதி பிரமாணங்களை மீறும் செயற்பாடுகள் என் மீது கண்டறியப்பட்டால் கல்வியியற் கல்லூரிகளின் ஒழுக்காற்றுக் குழு மற்றும் கல்வி அமைச்சினால் எடுக்கப்படும் எந்த தண்டனைக்கும் கட்டுப்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.*

............................ ..................................................

*திகதி* *விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

*19.0 வர்த்தமானி அறிவித்தலின் 6.2.1 பிரிவிற்கமைய விண்ணப்பதாரியின் வதிவிடத்தை உறுதிப்படுத்தல்:*

*இவ் விண்ணப்பதாரி, முதன்முறையாக க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தோற்றிய வருடம் அத்துடன் அதற்கு முன்னைய இரண்டு வருடங்கள் உட்பட குறைந்தது மூன்று (03) வருடங்களுக்கு நிரந்தரமாக வசித்த மாவட்டம் ............................ என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.*

................................................

*கிராம அலுவலர் கையொப்பமும்*
*பதவி முத்திரையும்*

*கிராம அலுவலர் பெயர்* :- ......................................
*கிராம அலுவலர் பிரிவின் பெயரும் விலாசமும்* :- ......................................
*திகதி* :- ......................................

*மேலே கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட தகவல்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.*

..............................

*பிரதேச செயலாளர் கையொப்பமும்*
*பதவி முத்திரையும்*

*பிரதேச செயலாளரின் பெயர்* :- ......................................
*பிரதேச செயலாளர் பிரிவின் பெயரும் விலாசமும்* :- ......................................
*திகதி* :- ......................................

*11-170*

---

## பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

*அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2015 (I) (2017)*

*2012.09.07 ஆந் திகதிய 1774/31 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2012.02.14 ஆந் திகதிய 1745/11 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின்*

தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, பெப்புருவரி மாதத்தில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்த நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பு நகரம் அல்லது கிட்டிய மற்றொரு நகரத்திற்கு அல்லது அமையப்பெற்றுள்ள பரீட்சை நிலையமொன்றுக்கு மாற்றவும் மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையுடைய அல்லது பரீட்சை நிலையமொன்றினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காது விடின் கொழும்பில் மாத்திரம் பரீட்சையினை நடாத்துவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கீழே தரப்பட்ட நகர அட்டவணை மற்றும் நகர இலக்கங்களை உசாவுதல் செய்து விண்ணபத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/ நகர இலக்கத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

4. **தகைமை**.- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத ஆனாலும் உள்ளீர்க்கப்பட்ட விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர்.

**குறிப்பு**.- மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையி லுள்ள விண்ணப்பதாரிகள் குறித்தான ஏற்பாடுகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உரிய மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். அம்மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். இணைந்த சேவைக்குரிய அலுவலரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில் உங்களுக்கு உரித்தான சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும்.

4.1 அட்டவணை இலக்கம் 01 - மாகாணக் குறியீட்டு இலக்கம் ஆவணத்தில் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

| மாகாணம் | குறியீட்டுஇலக்கம் |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வட மாகாணம் | 04 |
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |
| வடமத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சப்ரகமுவ மாகாணம் | 09 |

5. இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தனது திணைக்களத் தலைவரின் மூலம் 2017, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரானது

குறிப்பிடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண் ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேலே குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தித் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச்செய்யப்படலாம். இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவராவர். மேலும், அவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

7. (i) விண்ணப்பங்கள், பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 5.0 வரை முதற்பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் ஏ4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அது விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சைத் தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவுசெய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

(ii) தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை - விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளிற்கு ஒரே தடவையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதானால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதானால் ரூபா 500 உம், ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதானால் ரூபா 250 உம், பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுவதற்கென தீவின் ஏதேனுமோர் அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பியளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக் கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத் தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியின் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பிய போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் என்பனவற்றை தங்களிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கை கடிதத்தினை

தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது. பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது பதவிக்குரிய தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது.

9. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

10. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படலாகாது.

12. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும் உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். ஒரு போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

13. அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறு தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இனைப் பார்க்கவும்.)

14. அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக, சகல அலுவலர்களும் அரச கரும மொழியில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து நிரப்புதல் வேண்டும்.

15. பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப்பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பரீட்சையினைச் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியலானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

16. **பரீட்சை நடைமுறை** : விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இல. |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமைகள் | 100 | 1 மணித்தியாலம் | 01 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 100 | 1 மணித்தியாலம் | 02 |
| 3. கணினிப் பரீட்சை | 100 | 2 மணித்தியாலம் | 03 |

16.1 அலுவலக முறைமைகள்.- அரசாங்க அலுவலகங்களில் பின்பற்றப்படும் அலுவலக முறைமைகள் குறித்து பரீட்சார்த்தியின் அறிவு, அறிவின் நடைமுறைப் பிரயோகம் குறித்த அவரின் திறமை, அலுவலகக் கடிதங்களை முறையாக விளங்கிக்கொள்வதற்கும் தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புக்களினூடாக தனது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்குமான அலுவலரின் திறமை மற்றும் கடிதம் ஒன்றை வரைவதற்கான திறமை ஆகியவற்றைச் சோதிப்பதாக இவ்வினாப்பத்திரம் அமையும்.

16.2 கணக்கீட்டு முறைமை.- அரசாங்க அலுவலகத்தில் பின்பற்றப்படும் கணக்கீட்டு முறைமைகள், கணக்குகளை ஒழுங்குபடுத்தும் ஏடுகள் மற்றும் பதிவுகள் குறித்த பரீட்சார்த்தியின் அறிவானது சோதிக்கப்படும்.

16.3 கணினிப் பரீட்சை :

(i) அடிப்படைத் தகவல் தொழில்நுட்பக் கோட்பாடுகள்

(ii) வின்டோஸ் செயற்பாட்டு முறைமை (Windows Operating System)

(iii) கோவை முகாமைத்துவம்

(iv) சொல் செயலாக்கம் (Word Processing)

அடிப்படைத் திறன்கள், கணினித்திரை பரீட்சயம், எழுத்துக்களைத் தொகுத்தல், எழுத்துக்கள், எழுத்துருக்கள் மற்றும் தன்மைகள் ஆகியவற்றை வரிசைப்படுத்தல், பந்திகளை

ஓரப்படுத்தல், வரிசை இடைவெளி மாற்றம், தத்தல் அமைப்பு (Tab setting), சொல்லினைக் கண்டுபிடித்தலும் மீளமைத்தலும், எழுத்துக்கூட்டல் மற்றும் இலக்கணம், நிகண்டு நிரல்களை ஒழுங்கமைத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், எழுத்து வடிவங்களை வகைப்படுத்தல், கோவை முகாமைத்துவம், அஞ்சல் ஒன்றிணைப்பு, மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுத்தல்.

(v) விரிதாள்கள் (Spread sheets).- அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வையாக்கம், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், உட்சேர்த்தல் மற்றும் அழித்தல், தரவுகளை வகைப்படுத்தல், வரைபுகளை உருவாக்கல், அச்சிடல் @ தொழிற்பாடு (@function), மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை

(vi) தரவுத்தளம் :

அறிமுகம் குறித்த அடிப்படைத் திறன்கள்

தரவுத்தளம் ஒன்றை உருவாக்குதலும் பயன் படுத்தலும்

படிவங்கள்

இணைக்கப்பட்ட படிவங்கள், மேல் வரல் (popup) படிவங்கள்

உரையாடல் மற்றும் தகவல் பெட்டிகள்

வினவுதல்கள் (Queries)

வகைப்படுத்தல்

அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்

மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுதல்

(vii) அளிக்கை/விளக்கப்படம் :

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வையாக்கம்

வடிவங்கள், ஆயத்துப்படம் மற்றும் வரைபடங்களைப் பிரயோகித்தல்

உருவ வடிவங்களை உட்சேர்த்தல், பட வில்லை நிலைமாற்றம் (slide transition) மற்றும் புலக்காட்சி வெளிப்பாடுகள் (effects), அளிக்கைக் கருவிகளைப் பயன்படுத்தும் அசைவூட்டங்கள் (animations), மாஸ்ரர்களை (masters) தயாரித்தல், படவில்லை மற்றும் குறிப்புக்களை அச்சிடுதல்

(viii) இணையம்.- இணையத்திற்கான அறிமுகம், உலகளாவிய வலை (World Wide Web), கண்டு பிடிப்பது எவ்வாறு என்பது, நடைமுறை இணையம்

(ix) மின்னஞ்சல்.- அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், பதிலனுப்புதல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், செல்லப் பெயர்களை உருவாக்கலும் பயன்படுத்தலும், தகவல்களை உருவாக்குதல்

17. இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும். மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, ஒற்றோபர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (I) (2017)**

First Efficiency Bar Examination of Development Officers' Service - 2015 (I) 2017

(**இணைந்த சேவைகளுக்குரிய,** அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்க விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் மாத்திரம் பரீட்சை அறிவித்தலுக்கமைய விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்)

உங்களுக்கு உரித்தான சேவை : ☐
(இதை நிரப்ப முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் குறிப்பைப் பார்க்கவும்.)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 இற்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு நீங்கள் உத்தேசிக்கும் நகரத்தைச் சுட்டிக்காட்டவும்)
(இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1. 1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDANE, H. M. S. K.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

2. வேலை செய்யும் இடம் மற்றும் முகவரி :

2.1 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. நீங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6. தற்போதைய பதவி :
  6.1 பதவி :----.
  6.2 நியமனக் கடித இல. : CS/DOS :----.
  6.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட திகதி/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த திகதி :----.

7. 7.1 இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையாகவா ? :----.
  7.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையில்லையெனின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :----.
  7.3 தபாலகம்/உப தபாலகம் :----.
  7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
  7.5 திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டுங்கள்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்.) |

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை.-
மேற்தரப்பட்ட தகவல்கள் சரியானதென்றும் மேலே குறிப்பிடப்பட்ட மொழி ஊடகத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும், நான் பரீட்சைக்குத் தோற்றுவது ................... தடவையாகவென்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது அவசியமில்லை என்றும்/ரூபா ........................ பரீட்சைக் கட்டணத்தை ........................ எனும் தபால்/உப தபால் அலுவலகத்தில் .......................... ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கீழே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சை நடாத்துதல் குறித்து பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியானவர் தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

எனது அலுவலகத்தின் ஓர் அலுவலரான திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ............................................ ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து அவரை விடுவிக்க முடியுமென்றும்/பொருத்தமான பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றுரை :***

(i) மேற்தரப்பட்ட தகவல்கள் செவ்வை பார்க்கப்பட்டன என்றும் ;
(ii) அலுவலர் இணைந்த சேவைகளுக்கு உரியவர் என்றும்/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளார்* என்றும் ;
(iii) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்/தோற்றவில்லை* என்றும் ;

(iv) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளதால் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் ;

(iv) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதியுள்ளது என்றும்
நான் சான்றுப்படுத்துகின்றேன்.

* தேவையற்றவற்றை வெட்டி விடவும்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11-351

---

திருத்தம்

## இலங்கைத் திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

2017.09.29 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை அறிவித்தலில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 5.1 (அ) (i) பந்தி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

(i) தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 5.1(அ) (i) பந்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுதல் வேண்டும்.

5.1(அ)

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வழங்கப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

**குறிப்பு** :

(i) இத் திருத்தம் காரணமாக இலங்கைத் திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017 தொடர்பாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2017, நவெம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(ii) மேற்படி திருத்தம் காரணமாக பரீட்சை 2018, பெப்புருவரி மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
2017, ஒற்றோபர் 19.

11-283

திருத்தம்

**கட்டடங்கள் திணைக்களம்**

இலங்கைத் தொழில்நுட்ப சேவைகள் திட்டமிடல் அதிகாரி (பயிலுநர் வகுப்பு)

இத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவைகள் திட்டமிடல் அதிகாரி (பயிலுநர் வகுப்பு) தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2017.02.09 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2006 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 02 - 377 இன் பிரகாரம், 7.1 ஆம் பந்தி கீழே தரப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அதற்கமைய திருத்தங்கள் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

7.1 எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள் :
இதற்கமைய எழுத்து மூல போட்டிப் பரீட்சை கட்டடங்கள் திணைக்களத்திற்கு பதிலாக வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டடங்கள் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஊடாக, அவரால் வெளியிடப்படும் திகதியில் பரீட்சை நடைபெறும். அத்தோடு அவரால் அறிவிக்கப்படும் சட்ட திட்ட ஒழுங்கு விதிகளுக்குப் பரீட்சை விண்ணப்பதாரர் உட்படுவர்.

எம். ஆர். ஜெயச்சந்திரன்,
கட்டடங்கள் பணிப்பாளர் நாயகம்.

2017, ஒற்றோபர் 24.

11-454

---

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - (2017)

2012.09.07 ஆந் திகதிய 1774/31 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2012.02.14 ஆந் திகதிய 1745/11 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, பெப்புருவரி மாதத்தில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.பரீட்சார்த்திகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்த நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பு நகரம் அல்லது கிட்டிய மற்றொரு நகரத்திற்கு அல்லது அமையப்பெற்றுள்ளபரீட்சை நிலையமொன்றுக்கு மாற்றவும் மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையுடைய அல்லது பரீட்சை நிலையமொன்றினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காது விடின் கொழும்பில் மாத்திரம் பரீட்சையினை நடாத்துவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும. கீழே தரப்பட்ட நகர அட்டவணை மற்றும் நகர இலக்கங்களை உசாவுதல் செய்து விண்ணப்பத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/நகர இலக்கத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| **நகரம்** | **நகர இலக்கம்** |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |

*(தொடர்ச்சி)*

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

4. **தகைமை.**- முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள 10 ஆண்டு கால முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள கீழே குறிப்பிடப்படுள்ள அலுவலர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர்.

i. அபிவிருத்தி அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவர்கள்
ii. அபிவிருத்தி அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத போதிலும் உள்ளீர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்திருக்கும் அலுவலர்கள்.

**குறிப்பு.**- மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் குறித்தான ஏற்பாடுகளானவை இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உரிய மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். அம்மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். இணைந்த சேவைக்குரிய அலுவலரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில் நீங்கள் உரித்தான சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும்.

4.1 ***அட்டவணை இலக்கம் 01*** - மாகாணக் குறியீட்டுஇலக்கம் ஆவணத்தில் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

| மாகாணம் | குறிமீட்டு இலக்கம் |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வட மாகாணம் | 04 |
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |
| வடமத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சப்ரகமுவ மாகாணம் | 09 |

5. இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க விண்ணப்பதாரியினால்

*தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தனது திணைக்களத் தலைவரின் மூலம் 2017, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் **"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு"** என்னும் முகவரியினை அடையக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.*

*6. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*
(ii) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.*

*மேலே குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தித் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச்செய்யப் படலாம். இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவராவர். மேலும், அவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.*

*7. **விண்ணப்பங்கள்**.- (i) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலக்கங்கள் 1.0 தொடக்கம் 5.0 வரை முதற்பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் ஏ4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அது விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சைத் தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவுசெய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும், குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும், விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.*

(ii) ***தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை*** *- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமையை இரத்துச் செய்ய முடியும்.*

(iii) *முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை.*

*8. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியின் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்கத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் அனுப்பிய போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள் என்பனவற்றை தங்களிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கை கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும்.*

***குறிப்பு***.- *விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது. பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது.*

9. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

10. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படலாகாது.

12. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடத்தப்படும் உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். ஒரு போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

13. அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறு தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இணைப்பினைப் பார்க்கவும்.)

14. அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக, சகல அலுவலர்களும் அரச கரும மொழியில் விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து நிரப்புதல் வேண்டும்.

15. பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப்பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பரீட்சையினைச் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியலானது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

16. **பரீட்சை நடைமுறை** : விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| | பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இல. |
|---|---|---|---|---|
| 1. | தாபனச் சட்டக கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள் | 100 | 2 மணித்தியாலம் | 01 |
| 2. | நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகள் | 100 | 2 மணித்தியாலம் | 02 |

16.1 தாபனச் சட்டக் கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள்
தாபனச் சட்டக் கோவையின் VI, VII, VIII, XII, XIII, XIV, XVII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆம் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள்.

16.2 நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகள்
I, II, III, IV, V ஆம் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்கக் கொள்வனவு நடைமுறைகள்

17. இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும். மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, ஒற்றோபர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - (2017)**

Second Efficiency Bar Examination of Development Officers' Service - 2017

**உங்களுக்கு உரித்தான சேவை :**
(இதை நிரப்ப முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் குறிப்பைப் பார்க்கவும்.) ☐

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 இற்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு நீங்கள் உத்தேசிக்கும் நகரத்தைச் சுட்டிக்காட்டவும்) (இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : GUNAWARDANE, H. M. S. K.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

2. வேலை செய்யும் இடம் மற்றும் முகவரி :

2.1 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலகம்/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. பால் :
பெண் - 1
ஆண் - 0 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. நீங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |

6. தற்போதைய பதவி :

6.1 பதவி :----.

6.2 நியமனக் கடித இல. (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் மாத்திரம்) : CS/DOS/A/ :----.

6.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த திகதி :----.

6.4 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த திகதி :----.

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- மேற்தரப்பட்ட தகவல்கள் சரியானதென்றும் மேலே குறிப்பிடப்பட்ட மொழி ஊடகத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சை நடாத்துதல் குறித்து பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியானவர் தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தின் ஓர் அலுவலரான திரு./திருமதி/செல்வி ............................................. என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ............................................ ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(i) மேற்தரப்பட்ட தகவல்கள் செவ்வை பார்க்கப்பட்டன என்றும் ;

(ii) அலுவலர் இணைந்த சேவைகளுக்கு உரியவர் என்றும்/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளார்/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார் என்றும் ;

(iii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதியுள்ளது என்றும்

நான் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11-352

## கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

### அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய அளவீட்டு சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட பயிலுநர் உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை - 2017

Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services Devices and Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services - 2017

அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின், இலங்கைத் தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த III ஆம் தர அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.11.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அளவீட்டு சேவை சாதனங்களின் பரிசோதகர்கள் பதவி/ ஆய்வுகூட உதவியாளர் பதவி' எனக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. சேவை நிபந்தனைகள்:

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அநாதைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புகள் செய்தல் வேண்டும் ;
(ii) இப்பதவி மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் காலத்தைக்கொண்டிருக்கும் ;
(iii) அரச கரும மொழிக் கொள்கைகளுக்கு அமைய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/ 2007 இன்படி குறித்த காலப்பகுதிக்குள் அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

2. **சம்பளங்களும் படிகளும்**:

பயிற்சியளிக்கப்படும் தரத்திற்கு :
1 ஆம் வருடம் - ரூபா 15,924 மாதாந்தப் படி
2 ஆம் வருடம் - ரூபா 16,100 மாதாந்தப் படி

**பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்**:

அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர்கள்/ ஆய்வுகூட உதவியாளர் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 3/2016 ஆம் இலக்க பொதுநிருவாக பதவிக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் கீழ் MN 3 - 2016 ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.00ஆகும். குறித்த சம்பளம் 2020.01.01ஆந்திகதி முதல் செல்லுபடியாகும். அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் வழங்கப்படும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச்செய்து 03 வருடங்களுக்குள் முதலாவது தடைகாண் பரீட்சையும், II ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 வருடங்களுக்குள் இரண்டாவது தடைகாண் பரீட்சையும், I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 05 வருடங்களுக்குள் மூன்றாவது தடைகாண் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள்**:

(i) ***அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவி***

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது பழைய பாடத்திட்டத்திற்கு அமைய பௌதீகவியல், பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமோர் பாடத்திற்கு திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) ***ஆய்வுகூட உதவியாளர் பதவி***

*க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களுள் பௌதீகவியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது பழைய பாடத்திட்டத்திற்கு அமைய க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் பௌதீகவியல் உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமோர் பாடத்திற்கு திறமைச் சித்தி உட்பட ஒரே தடவையில 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*4.* ***ஏனைய தகைமைகள் .-***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) *விண்ணப்ப முடிவுத்திகதியில் 18 - 30 இற்கும் இடையிலான வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும். (அதற்கு அமைய 1999.11.29ஆந்திகதி அல்லது அதற்கு முன் அல்லது 1987.11.29 ஆந் திகதி அல்லது அதற்கு பின் பிறந்தவர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் ஆவர். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லையானது பொருந்தாது).*(iii) *சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும், ஆரோக்கியமானவராகவும் இருத்தல் வேண்டும்.*

5. ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-***

*பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு ஆகக்கூடிய புள்ளிகளைப்பெறும் பரீட்சார்த்திகளின் மொத்த தேர்ச்சிப் புள்ளிகளின் ஒழுங்கிற்கு அமைய ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்க்கும் அளவைவிட இருமடங்கு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் , சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளைப் பூர்த்தி செய்த, இரண்டு பாட விடயங்களுக்கும் மொத்தமாக உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்படுவார்.*

*பரீட்சையில் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் அவர்களுடைய பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தனித்தனியாக அல்லது* www.results.exams.gov.lk *எனும் இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும். பரீட்சையை நடத்துவதும், பெறுபேறுகளை வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அவருடைய முடிவு இறுதி முடிவாகும்.*

*6.* *இப்பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் வசிக்கும் முகவரிகளுக்கு அண்மித்த நகரத்தை தமது பரீட்சை நிலையமாகத் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் நகரமும், நகர இலக்கமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒருமுறை விண்ணப்பித்த நகரம் எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.-*

| நகரம் | நகர இல. | | நகரம் | நகர இல. |
|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | | வவுனியா | 13 |
| கம்பஹா | 02 | | திருகோணமலை | 14 |
| களுத்துறை | 03 | | மட்டக்களப்பு | 15 |
| மாத்தளை | 04 | | அம்பாறை | 16 |
| கண்டி | 05 | | புத்தளம் | 17 |
| நுவரெலியா | 06 | | குருநாகல் | 18 |
| காலி | 07 | | அனுராதபுரம் | 19 |
| மாத்தறை | 08 | | பொலன்னறுவை | 20 |
| ஹம்பாந்தோட்டை | 09 | | பதுளை | 21 |
| யாழ்ப்பாணம் | 10 | | மொனராகலை | 22 |
| மன்னார் | 11 | | கேகாலை | 23 |
| முல்லைத்தீவு | 12 | | இரத்தினபுரி | 24 |
| | | | கிளிநொச்சி | 25 |

உத்தேச எல்லா நகரங்களிலும் அல்லது அதிகமான நகரங்களில் பரீட்சை நிலையங்களை தாபிப்பதற்கு தேவையான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை முன்வைக்காதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்த பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

07. **எழுத்துப் பரீட்சை :**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். எச் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பிக்கும் பரீட்சையின் மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தி அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தான் விண்ணப்பித்த மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக்கொண்டிருக்கும்

01. நுண்ணறிவுப் பரீட்சை.- (நேரம் : 1 மணித்தியாலம்) மொத்தப் புள்ளிகள் - 100.
பரீட்சார்த்தியின் தர்க்கவியல் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு ஆற்றல், தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்குப் பல்தேர்வு வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை அளிக்கக் கூடிய வகையில் 50 வினாக்கள் கொண்டதாக இருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

02. தொழில்நுட்ப ரீதியான வினாப்பத்திரம்.-
(நேரம்: 2 மணித்தியாலங்கள்) மொத்தப் புள்ளிகள் - 100
பௌதீகத் தர அளவீடு மற்றும் பிரயோக பௌதீகவியல் ஆகியவற்றைப் பற்றிய அறிவை பரிசீலனை செய்வதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். க.பொ.த.(உயர்தர) மட்டத்திலான அறிவு போது மானது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பிக்க வேண்டிய முறையும்.-**

விண்ணப்பப்படிவங்களின் தலைப்பு இலக்கம் 01 முதல் 07 வரை முதலாம் பக்கத்திலும், 08 முதல் 11.2 வரை இரண்டாம் பக்கத்திலும், 11.3 முதல் 17 வரை மூன்றாம் பக்கத்திலும், எஞ்சியவை நாலாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட தகவல்களை உங்கள் கையெழுத்து மூலம் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி புறக்கணிக்கப்படும். குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம் வசம் வைத்திருப்பது விண்ணப்பதாரிக்கு பிரயோனசமுள்ளதாக அமையும். அதேசமயம் விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட இரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாக இருப்பின் இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம் . தகைமைகளுக்கு ஏற்ப நியமனத்தில் கிடைக்க விரும்பும் அல்லது உங்களின் விருப்பத்திற்குரிய பதவிக்கு 1 எனவும் இரண்டாவது விருப்பத்திற்குரிய பதவிக்கு 2 எனவும் குறிப்பிடவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

9. அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபன சேவையில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள் அவரவர் பணிபுரியும் நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முடிவின் அடிப்படையில், முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி , குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்படிவங்களை அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பதாரிகள் சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதியட்டை விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைத்த பின்னர் உடனடியாக அதை அறிவிக்கும் முகமாக பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்திய போட்டோப் பிரதி மற்றும் பரீட்சை பற்றுச்சீட்டு, பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு மற்றும் பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே இருப்பாராயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் ஆகியவற்றையும் அனுப்பி வைப்பது பயனுள்ளதாகும்.

10.1 பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரி அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறற்ற ஏனைய விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், ஓய்வு பெற்ற அதிபர், பிரிவிற்குரிய கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியபிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையைச் சேர்ந்த அதிகாரி, ரூபா 240,360 அல்லது அதற்கு மேலான வருடாந்த இணைந்த சம்பள அளவுத்திட்டத்தைப்

பெறும் அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது நிரந்தர பதவியணி அதிகாரி, பௌத்த விகாராதிபதி அல்லது நாயக்கத்தேரோ அல்லது வேறு மதங்களைச் சேர்ந்த மத நிலையமொன்றில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தரத்தைச் சேர்ந்த ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட பிரவேசப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இரண்டு பதவிகளுக்காகவும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,300 செலுத்த வேண்டும். இத்தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்ற வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அல்லது உபதபால் நிலையத்தில் பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எவ்விதமான கட்டணமும் அறவிடப்படாது என தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன். பரீட்சைக் கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பி செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றப்படவோ முடியாது என்பதுடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தங்களிடம் வைத்திருப்பது பயன்படும்.

12. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் பரீட்சைகளின்போது, பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டையை வழங்கிய ஒரே காரணத்தினால் மேற்படி பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முழுமையான தகைமைகளையும் பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது.

பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பிறப்பிக்கும் சகல சட்ட திட்டங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். மேற்படி சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள் ஆவார்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தீர்மானிக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு மாத்திரமே உண்டு. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட இவ்வறிவித்தலில் ஏதாவது முன்பின் முரணாக இருப்பின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவாக்கம் பெறும்.

எஸ். என். அகுரண்திலக,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள்
திணைக்களப் பணிப்பாளர்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த,
பிடிபன,
ஹோமாகம.
2017.10.27

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவைக்குரிய அளவீட்டு சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர்கள் பதவிகளுக்கும் பயிலுனர் ஆய்வுகூட உதவியாளர்கள் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for the Recruitment to the Trainee Grade of the Posts of Inspectors of Measurement Services Devices and Lab Assistant of the Sri Lanka Technological Service of Department of Measurement Units, Standards and Services - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

விண்ணப்பிக்கும் பதவி : ☐

அளவீட்டுச்சேவை சாதனங்களின் பரிசோதகர் பதவிக்கான இலக்கம் 01, ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான இலக்கம் 02, இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் இலக்கம் 03 ஐக் குறிப்பிடுக. (பரீட்சை பற்றிய அறிவித்தலின் 08 ஆம் பந்திக்கு அமைய).

இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் நியமனத்தின் விருப்பத்திற்கேற்ப அதற்குரிய பதவிக்கு முன் 1 மற்றும் 2 என இலக்கமிடுக.

அளவீட்டுச் சேவை சாதனங்களின் பயிலுனர் பரிசோதகர் ☐

பயிலுனர் ஆய்வுகூட உதவியாளர் ☐

பரீட்சையில் தோற்ற விரும்பும் நகரமும், நகர இலக்கமும்:

நகரம்: ☐ நகர இலக்கம்: ☐

(பரீட்சை அறிவித்தலின் 6 ஆம் பந்திக்கு அமைய)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
(உ-ம் - NIMAL, A.B.). …………………………………………………………………..

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): …………………………….......................

3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ………………………………………………

4. நிரந்தர முகவரி :- (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (பரீட்சை அனுமதிப் பத்திரம் இம்முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்) ………………………………………………

5. பால் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(குறிப்பிட்ட இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. திருமணமானவரா/திருமணமாகாதவரா?:
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 ☐
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

8. தேசிய இனம் :-
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையோர் - 5 ☐
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

9. (அ) பிறந்த திகதி :-

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

10. நீங்கள் பிறப்பின் மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரஜையா எனக் குறிப்பிடுக. (பதிவின் மூலமாயின் விபரங்களைத் தருக.)

11. கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :

11.1 க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை :

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :
……………………………………..

பரீட்சை இலக்கம் :
…………………………………….

| பாடம் | | பெறுபேறு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

11.2 க.பொ.த. (உயர் தரப்) பரீட்சை :
பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :- …………………………..
பரீட்சை இலக்கம் :- …………………………………………

| பாடம் | | பெறுபேறு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

11.3

| நீங்கள் சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சை | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

11.4 ஏனைய கல்விசார்/தொழில்சார் தகைமைகள்

| பரீட்சை | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் மற்றும் முன்னர் பதவி வகித்திருந்தால் அதுபற்றிய விபரங்கள்:

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

13. நீங்கள் ஓர் அரச பதவியை வகித்து அதில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக.)
.....................................................................................................................

14. உங்களுக்கு எதிராக (ஏற்கனவே அரச சேவையில் ஈடுபட்டிருப்பின்) திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?
.....................................................................................................................

15. ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா?
.....................................................................................................................

16. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெறக் கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :-

1. ..........................................................
..........................................................
..........................................................
..........................................................

2. ..........................................................
..........................................................
..........................................................
..........................................................

17. ஏனைய வேறு தகவல்கள்
.....................................................................................................................
.....................................................................................................................

18. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் நிலையம் :-
..........................................................................

பற்றுச்சீட்டு இலக்கம் :-
..........................................................................

திகதி :-
..........................................................................

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு கழறாத வகையில் இங்கு ஒட்டவும். |
|---|

19. பரீட்சார்த்தியின் உறுதியுரை:
இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதெனவும், சரியானதெனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ................ மற்றும் ................ ஆந் திகதியிடப்பட்ட பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளதென உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படவும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமையற்றவன் எனக் கருதப்பட்டால் பரீட்சைக்கு முன்பாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது பரீட்சையின் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் ஏதாவது தகவல் அல்லது விபரம் பொய்யானதெனக் கண்டறியப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதே சமயம் பரீட்சை நடத்துவது பற்றி பரீட்சை ஆணையாளர்

நாயகம் விதிக்கும் ஒழுங்குவிதிகளுக்கும், பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு இணங்குவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

.......................... ..................................
திகதி பரீட்சார்த்தியின் கையொப்பம்.

20. விண்ணப்பதாரி அரச சேவையில் பணிபுரிபவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-
மேல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும்/ பின்வருமாறு அவை திருத்தப்பட வேண்டுமெனவும், குறித்த கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பதாரியின் பணிகளும் நடத்தையும் .............................. எனவும் நான் சான்றுப்படுத்துகிறேன். தற்போது விண்ணப்பதாரி வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

...............................
திணைக்கள/நிறுவன
தலைவரின் கையொப்பம்.

பதவி :-........................................
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்)

திகதி :-.......................................

11-419

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை-2017**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வியாழன் | 02.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2017 |
| | | வெள்ளி | 10.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2017 |
| | | வெள்ளி | 17.11.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.11.2017 |
| | | வெள்ளி | 24.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2017 |
| | | வியாழன் | 30.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.11.2017 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 08.12.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.11.2017 |
| | | வெள்ளி | 15.12.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.11.2017 |
| | | வெள்ளி | 22.12.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.12.2017 |
| | | வெள்ளி | 29.12.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.12.2017 |

**அட்டவணை-2018**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2017 |
| | | வெள்ளி | 12.01.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2017 |
| | | வெள்ளி | 19.01.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2018 |
| | | வெள்ளி | 26.01.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2018 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*